விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 27 திங்கட்கிழமை (12.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 19-வது திருத்தமாக மாறும் 13

# எதிரணிக் கட்சிகள் ஆராய்வு!

## தமிழ் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்கிறார் மனோ

13-வது திருத்தத்திற்கு பதிலாக 19ஆவது திருத்தமொன்றை கொண்டு வரும் அரசாங்கத்தின் திட்டம் மற்றும் அமைச்சர் விமல் வீரவன்ச வின் தேசிய சுதந்திர முன்னணியுடனான ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் தலைமையிலான குழுவினரின் பேச்சுவார்த்தை ஆகியவை தொடர்பில் நேற்று எதிரணிக் கட்சி தலைவர்கள் கூட்டத் தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க - ஜே.வி.பி இணைந்து செயற்படும்

(கொழும்பு)

தேவை ஏற்படும்போது மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படும் என எதிர்க்கட்சித்தலை வர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்க் கட்சியின் எதிர்ப்பில் மக்கள் விடு தலை முன்னணி மாத்திரமே அங்கம் வகிக்க வில்லை.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்றத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை கலவரம் 10 மில்லியன் நட்டம்

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை யில் கைதிகளுக்கும் படையினருக்கும் இடை யில் இடம்பெற்ற கலவரத்தில் 10 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலை கள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இக்கலவரத்தின்போது 27 சிறைக் கைதி கள் உயிரிழந்துள்ளதுடன் 45 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

அத்துடன், (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸிலுள்ள புலிகளின் தளபதிகள் பொலிஸ் பாதுகாப்புக் கோரிக்கை

(பாரிஸ்)

விடுதலைப்புலிகள் இயக்கத் தளபதி பரிதி பாரிஸில் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல் லப்பட்டதை அடுத்து பிரான்ஸில் உள்ள விடுதலைப்புலிகள் நெடியவன் அணியைச் சேர்ந்த தளபதிகள் மூவர் பொலிஸ் பாதுகாப் புக் கோரியிருப்பதாக, பிரான்ஸ் பொலிஸ் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட தளபதி பரிதியும் விடுதலைப் புலிகள் நெடியவன் அணியைச் சேர்ந்தவர்.

பரிதி கொலையின் விசாரணை தேசிய பொலிஸாரிடம் இருந்து புலனாய்வுப் பிரிவு க்கு மாற்றப்பட்டுள்ளது.

அவர்களின் ஆரம்பக் கட்ட விசாரணை கள் தொடங்கியுள்ளதாகவும், கொல்லப்பட்ட தளபதி ஏற்கெனவே பிரான்ஸ் சிறையில் கைதியாக இருந்து தற்போது பிணையில் உள்ளதால் அவர் பற்றிய விபரங்கள் தம் மிடம் உள்ளதாக புலனாய்வுப் பிரிவுப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தற்போது கொல்லப்பட்ட பரிதி யின் அமைப்பைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்பது நாடுகள் இணைந்து இலங்கைக்கு பொறிவைக்க முயற்சி

இலங்கையை மனித உரிமை மீறல் பொறி யில் சிக்க வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒன்பது நாடுகள் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் வன்னிப் படைத் தலைமையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஆஜர்படுத்த முயற்சி எடுத்துள்ளன.

இலங்கை, சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தை ஏற்றுக்கொள்ளும் சர்வதேச பிரகடனத்தில் கையெழுத்து இடவேண்டு மென கோரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை யின் கால மீளாய்வு அமர்வுகளில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

டியூனிசியா, உருகுவே, கொஸ்டரிக்கா, ஈக்வடோர், லெட்வியா, சுலோவேனியா, ஒஸ்ட்ரியா, ஸ்பெயின் மற்றும் சுவிடன் ஆகிய நாடுகள் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் இன்னல்கள் ஐ.நாவிடம் எடுத்துரைப்பு

### ஸ்ராலின் தெரிவிப்பு

ஈழத்தமிழரின் இன்னல்கள் மற்றும் வாழ்க் கைத் தரம் குறித்து ஐ.நாவிடமும் ஐ.நா மனித உரிமை ஆணையத்திடமும் சிறப்பாக விளக் கியுள்ளோம் என்று தி.மு.க. பொருளாளர் மு. க. ஸ்ராலின் கூறியுள்ளார்.

ஐ.நா. சபையிடமும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடமும் டெசோ மாநாட்டுத் தீர் மானங்களை அளித்துவிட்டு நேற்று சென்னை திரும்பினார் ஸ்ராலின்.


விமான நிலையத்தில் அவர் செய்தியாளர் களிடம் பேசுகையில்.

சென்னையில் நடந்த டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஐ.நா. சபையில் உள்ள மனித உரிமைகள் கழகத்தில் வழங்குவதற்காக நானும் டி.ஆர்.பாலுவும் சென்றோம்.

ஐ.நா.சபை மனித உரிமை கழகத்தில் டெசோ மாநாட்டு தீர்மானங்களை வழங்கி இல ங்கை தமிழர்களின் இன்னல்கள் பற்றி எடுத்து கூறினோம். (20ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களின் சம்பளம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்

### ரணில் வலியுறுத்தல்



அரச ஊழியர்களின் சம்பளத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க முடியாத பட்சத்தில் இந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்து விலக வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் உரையாற் றியபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் கோழி இறைச்சியின் கிலோ விலை 30 ரூபாயினால் (20ஆம் பக்கம் பார்க்க)

## உதுல் பிரேமரட்ண பிணையில் விடுதலை



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் முன்னாள் ஏற்பாட்டாளரும் முன்னணி சோஷ லிசக் கட்சியின் முக்கியஸ்தருமான உதுல் பிரேமரட்ண சரீரப் பிணையில் நுகேகொட நீதிவான் நீதிமன்றத் தினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுவிக் கப்பட்டுள்ளார்.

பொரலஸ்கமுவ பகுதியில் இடம்பெற்ற மோதல் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி மகிந்த நிறைவேற்ற வேண்டும்

### லண்டன் பினான்ஸியல் ரைம்ஸ் தெரிவிப்பு

போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல் கள் குறித்த விடயங்களில் சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை அரசாங்கம் தீர்வு காண வேண்டும். இலங்கை ஜனாதிபதி ஐ.நா வுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற் றப்பட வேண்டும் என லண்டனில் இருந்து வெளியாகும் பினான்ஸியல் ரைம்ஸ் என்ற சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்ற பூகோள கால மீளாய்வு தொடருக்குப் பின்னரான அதனது வெளியீட்டிலேயே இக்கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை இந்தியா இம்முறை தமக்கு பேருதவி புரிந்ததாக இலங்கை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்த கருத்துகள் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, இந்தியாவின் இந்த நடவடிக்கை குறித்துப் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் முன்வைக் கப்படுகின்றன. எனினும் அதன் உண்மைத் தன்மை குறித்து கூறும்போது இலங்கைக்கு எதிரான பல நாடுகளின் பரிந்துரைகளை ஆராயும் பணியில் மூன்று நாடுகளைக் கொண்ட குழு ஈடுபட்டது. சுமார் 99 நாடுகள் தெரிவித்த பரிந்துரைகளை இக்குழு ஒழுங்கு படுத்தியது.

இத்தொடரில் 210 பரிந்துரைகள் வரிசைப் படுத்தப்பட்ட நிலையில் அமைச்சர் மகிந்த சமரசிங்க (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தூக்கத்திலேயே மாணவன் பலி

(கொழும்பு)

இருமலுக்கு குடிக்கின்ற, தடை செய்யப்பட்ட பானத்துடன் மேலும் சில குளிசைகளை சேர்த்து பருகிய 12 வயது மாணவன் தூக்கத்திலேயே உயிரிழந்த சம்பவமொன்று வத்துப் பிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவன் சக மாணவர்களுடன் இணைந்தே வத்துபிட்டிய முதலீட்டு வலையத்தின் மறைவான இடத்தில் வைத்து பருகியிருப்பதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# பாரசீக குடாநாடுகளுக்கு வெளியிலும் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

பாரசீக குடாநாடுகளைச் சாராத நாடுகளில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பினை பெறுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மேற்கொண்டு வருகின்றது.

அதற்கமைய விசேட பயிற்சித் திட்டம் ஒன்றை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்தாலி, சீனா, அவுஸ்திரேலியா, சீஷெல்ஸ், மொரீஷியஸ், அசர்பய்ஜான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளில் உள்ள பிரபல தனியார் நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டுள்ளது.

முதல்படியாக இலங்கையில் இருந்து கட்டாருக்கு மருத்துவ தாதிகளையும், சீஷெல்சிற்கு கல்வித்துறை சார்ந்தவர்களையும் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது தவிர, முதன்முறையாக அதிக ஊதியத்துடன் சுரங்கத் தொழிலுக்காக இலங்கையர்களை அனுப்புவதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை வெளிநாட்டு வேலை வாய்ப்பினை மேலதிகமாக பெறும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறை அமைச்சும் இளைஞர் விவகார அபிவிருத்தி அமைச்சும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய பல பயிற்சி நிலையங்களை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஊவா பாடசாலைகளுக்கு இன்று விடுமுறையளிப்பு

(கொழும்பு)

தீபாவளித்தினத்தை முன்னிட்டு ஊவா மாகாணத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு இன்று திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என ஊவா மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஏ.எல்.அணில் விஜேசிறி தெரிவித்தார்.

இதற்குப் பதிலாக எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகள் இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை விடுமுறையில்லை இதனால் அவர்களுக்கு வழமைபோல் வகுப்புக்கள் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

# பொதுமக்கள்-பொலிஸ் மோதல்
# 11 பேர் படுகாயம் ; மூவருக்கு பணி நீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் ஹொரண, மொரகஹஹேன பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகளுக்கும் பிரதேச மக்களுக்குமிடையில் நேற்று முன்தினம் இரவு மோதல்கள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, மூன்று பொலிஸ் அதிகாரிகளும், எட்டு பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். காயமடைந்த பொலிஸார் மூவர் உள்ளிட்ட 11 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச மக்கள் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலை தடுப்பதற்காக சென்ற ஹொறணை, மொறகேன்ன பிரதேச பொலிஸ் அதிகாரிகள் மூவர் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் இந்த பிரதேசத்தைச் சேர்ந்த இரு குழுக்களிடையே நேற்றுமுன்தினம் நள்ளிரவு மோதல் ஏற்பட்டுள்ளது.

தகவல் அறிந்த பொலிஸார் அங்கு சென்ற வேளை, கிராம மக்களிற்கும் பொலிஸாரிக்கும் இடையில் மோதல்நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஆராய்ந்ததை அடுத்து பொலிஸார் மூவரும் மதுபோதையில் இருந்ததாக தெரியவந்துள்ளதையடுத்து அவர்கள் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்



## தவறிவிட்டது

வைத்திலிங்கம் உதயராசா ஆகிய என்னுடைய காணி உறுதிப்பத்திரம், வரைபடம், வைத்தியசாலை பத்திரம், சோலைவரி துண்டு, பெயர் மாற்ற கடிதம் என்பன அடங்கிய் கைப்பை மானிப்பாய் வீதி சுதுமலைச் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் என தயவுடன் வேண்டுகின்றேன்.

தகுந்த சன்மானம் வழுங்கப்படும்.

(946) தொடர்பு 077 8364858



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30
2.30
6.30
A/C D.T.S
13ம் திகதி முதல் விஜயின் துப்பாக்கி
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்


# விடுமுறை கழிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

வயல் குளத்திற்கு விளையாடச் சென்ற சிறுவர், குளத்து நீரில் அமிழ்ந்து உயிரிழந்த பரிதாப சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் மூளாய் தெற்கிலுள்ள வயல் குளம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் நவாலி வடக்கினைச் சேர்ந்தவரும் நவாலி அரசடி மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் விஜயன் விதுசன் (வயது 11) என்ற பாடசாலை மாணவனே உயிரிழந்தவராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சனி, ஞாயிறு தினங்கள் பாடசாலை விடுமுறை தினங்கள் என்பதால் விடுமுறையினைக் கழிப்பதற்காக குறித்த சிறுவன் மற்றும் அவனது சகோதரர்கள் மூளாய் தெற்கில் உள்ள தமது உறவினர் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

அங்கு சென்ற குறித்த சிறுவர்களோடு 6 சிறுவர்களினையும் அங்குள்ள வயோதிபப் பெண்ணொருவர் வயலில் மாடு கட்டுவதற்காகவும். சிறுவர்களுக்கு வயலினைக் காட்டுவதற்காகவும் அழைத்துச் சென்றுள்ளார்.

குறித்த வயோதிபப் பெண் அருகில் மாட்டினை மேய்ச்சலுக்காக கட்டிக்கொண்டிருந்த பொழுது குறித்த சிறுவர்கள் குளத்தில் இறங்கியுள்ளனர்.

குளம் அணைக்கட்டுடன் காணப்பட்ட போதிலும் குளத்தின் ஆழம் திடீரென அதிகரிப்பதால் குறித்தசிறுவர்களில்மூவர் குளத்தில் உள்ள குழிக்குள் வீழ்ந்துள்ளனர்.

குளத்து நீரில் அமிழ்ந்த சிறுவர்களில் இருவரை குறித்த சிறுவர்களோடு சென்ற 12 வயதுச் சிறுமி, கையைப்பிடித்து வயோதிபப் பெண்ணின் உதவியுடன் காப்பாற்றியுள்ளார்.

எனினும் உயிரிழந்த சிறுவனின் கை நழுவியதால் குளத்து நீரில் அமிழ்ந்து மூச்சுத்திணறி உயிரிழந் துள்ளார்.

உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் ஏற்கெனவே சிறுவன் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளதோடு வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மழை காலம் ஆரம்பித்து நீரில் மூழ்கி இறந்த சிறார்களின் இறப்பில் குறித்த இறப்பு 7ஆவது இறப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும். (எ-4)



- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
24
Nov 2012-Apr 2013
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012
(C-1418)


# மரண அறிவித்தல்



## சீனிவாசகம் தர்மலிங்கம்
(ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்)

மயிலங்கூடல் கருகம்பனையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் தர்மலிங்கம் அவர்கள் (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் செல்வலட்சுமியின் மகனும் காலஞ்சென்ற சிவகுரு செல்லம்மாவின் மருமகனும், நாகலட்சுமியின் அன்புக் கணவரும் மோகன்ராஜ் (பராமரிப்புப் பகுதி, யாழ் பல்கலைக்கழகம்) பிருதிவிராஜ் (முகாமையாளர், இலங்கை வங்கி, சங்கானை) பிறேம்ராஜ் (லண்டன்), பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், நற்குணவதி, கலைவாணி (ஆசிரியை), கலையரசி (லண்டன்), வேதநாயகன் (அரச அதிபர், முல்லைத்தீவு) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், குணபாலசிங்கம், பொன்னுத்துரை, குணலிங்கம், தவமணிதேவி, மற்றும் சத்தியதேவி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் பவித்திரா, சுபத்திரா, திவாகரன், கிசோர்ராஜ், அபிராமி, அபிசுயா, கரிராஜ், வரஜீவி, கோலமுகி, பிரதீப், பிரசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். *அன்னாரின் இறுதிக் கிரியைகள் (12.11.2012) இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில்* பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### வாழ்க்கைப் பயணம்

மாமனாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

ஊரிலே விசேடம்... குடும்பத்துடன் வருகை தரவும் என்று அதில் எழுதப்பட்டுள்ளது.

கணவன், மனைவி, மூன்று வயதில் ஒரு குழந்தை- இது தான் அந்தக் குடும்பம்.

இவருடைய நெருங்கிய நண்பரிடம் ஒரு கார் இருந்தது. அதை இரவல் வாங்கிக் கொண்டு மூன்று பேரும் தங்களது பயண த்தை ஆரம்பித்தார்கள்.

இவர்கள் தங்களது பயணத்தை குறித்த நேரத்தில் ஆரம்பிக்கவில்லை "லேட்," ஆகியே ஆரம்பித்தார்கள்.

இப்போது கார் வேகமாகப் பறக்கிறது. அருகில் இருந்த மனைவி சுவாரஸ்யமாகக் கதைத்துக்கொண்டு வந்ததில் கணவன் வழியைத் தவற விடுகிறான். அவ்வழியால் பயணிப்பவர்களிடம் விசாரிக்கிறான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வழி சொல்லி விட்டு செல்கிறார்கள். இவன் குழம்பிப் போய் விட்டான்.

அருகில் இருந்த பொலிஸ் நிலையத்தை அணுகி சரியான பாதையைக் கேட்டு அறிந்து கொண்டான்.

இப்படி வழி கேட்டுக் கொண்டிருந்ததில் அவர்களது பயணம் காலதாமதமாகியது.

மாலை நேரம் நெருங்கியது. இருள் கௌவத் தொடங் கியது. காட்டினுள் கார் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. திடீரென கார் நடுக்காட்டில் நின்று விட்டது. "ஸ்டார்ட்" செய்தால் சத்தம் எதுவும் இல்லை. இவன் காரை விட்டு இறங்கி முன்னால் உள்ள கதவைத் திறந்து பார்த்தால் அனைத்தும் சரியாக இருந்தது.

"விரைவாக என்னவென்று பாருங்கள்... இந்த நடுக்காட்டிலே யாராவது நம்மை அடித்தால் கூட கேட்பதற்கு யாரும் கிடையாது" என்று மனைவி கூறினாள்.

"ஆமாம்... இப்போது அவசரப்பட்டு என்ன பிரயோசனம்... வீட்டில் இருந்து நேரத்திற்கு பயணத்தை ஆரம்பித்திருந்தால் இப்படி நடந்திருக்காது" என்று கணவன் கூறினார்.

"அலங்காரம் செய்யவே அரைநாள் முடிந்தது... இப்போது துன்பப்படுகிறோம். எல்லாம் உன்னால்தான்" என்று அவன் கத்தினான்.

நீங்கள்தான் வழியை தவறவிட்டீர்கள், அதனால் "லேட்" ஆகிவிட்டது. இல்லாவிடின் எங்கள் அப்பாவின் வீட்டுக்கு இந்நேரம் போய்ச் சேர்ந்திருக்கலாம்- என்று மனைவி கூறினாள்.

இப்படியாக இருவரும் சண்டை பிடித்துக் கொள்வதை காரினுள் இருந்த குழந்தை அவதானித்தது.

"ஸ்டாப்! ஸ்டாப்!" என்று கத்தியது.

குழந்தையின் பேச்சைக் கேட்டதும் அவர்களுக்கு சிரிப்பு வந்தது. கோபம் மறைந்து விட்டது.

"கார் நின்று விட்டால் தள்ள வேண்டியது தானே... அதற்கு ஏன் இப்படி நீங்கள் இருவரும் சண்டை பிடிக்கிறீர்கள்" என்று குழந்தை சொன்னது.

"சரி... குழந்தை சொற்படி செய்தார்கள். குழந்தை காரினுள்ளே இருந்தபடியே முன்பக்க கண்ணாடியிலே கையை வைத்து தள்ளியது.

மிகவும் சிரமப்பட்டு தள்ளியது. அதற்கு என்னவோ தானும் காரைத் தள்ளுகிறேன் என்று நினைப்பு.

சிறிது நேரத்தில் கார் "ஸ்டாட்" ஆகிவிட்டது.

நான் சொன்னது சரியாகப் போனது- என்று குழந்தை கைதட்டி சிரித்தது.

ஒரு வழியாக மூவரும் ஊருக்குப் போய் சேர்ந்தார்கள்.

"ஏன் இவ்வளவு லேட்?" என்று மாமனார் தனது கேள்விகளைத் தொடுக்க ஆரம்பித்தார்.

இருவரும் மாறிமாறி காரணத்தை சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூறி முடித்த பின்னர் குழந்தை பேச ஆரம்பித்தது.

தாத்தா! அவர்கள் சரியாக சொல்லவில்லை... நான் சொல்கிறேன் கேளுங்கள்; கார் "ஸ்டாட்" ஆகவில்லை. எல்லோரும் தள்ளினார்கள். அப்போதும் புறப்படவில்லை. நான் காரினுள் இருந்து வேகமாகத் தள்ளினேன். அது "ஸ்டாட்" ஆகிவிட்டது.

இவ்வாறு குழந்தை பெருமையாகச் சொல்லியதைக் கேட்டு அனைவரும் பெருமையாகப் பேச ஆரம்பித்தார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# லக்ஸ்மன் கதிர்காமருக்கு உருவச்சிலை வைக்குமாறு ஜனாதிபதி பணிப்பு



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு உருவச்சிலை வைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் உருவச்சிலையினை நிறுவுவதற்கு தேவையான ஏற்பாடுகளை விரைவில் செய்யுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கடந்த 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொழும்பிலுள்ள அவரது வீட்டில்வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் 1994 ஆம் ஆண்டு 2001 ஆம் ஆண்டுமற்றும் 2004 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தற்போதைய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிற்கு உருவச்சிலை அமைத்தல் குறித்து ஜனாதிபதி அறிவுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## இலங்கையிலிருந்து நாற்பது உழவு இயந்திரங்கள் ஏற்றுமதி

இலங்கை நிறுவனம் ஒன்று 40 உழவு இயந்திரங்களை சுவிற்சர்லாந்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது. குறைந்த விலையிலான இந்த உழவு இயந்திரங்கள் சுவிற்சர்லாந்து விவசாயிகளுக்கு நல்ல பலனை அளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சுவிற்சர்லாந்து மன்னருக்கு உழவு இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது. அதனை பெற்றுக் கொண்ட மன்னர் உழவு இயந்திரத்தின் செயற்பாடுகள் குறித்து திருப்தி கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 40 உழவு இயந்திரங்கள் சுவிற்சர்லாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள அதேவேளை மேலும் 100 இயந்திரங்களை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த உழவு இயந்திரங்கள் குறித்து சுவிற்சர்லாந்து முதலீட்டு சபைத்தரப்பினர் கருத்து தெரிவிக்கையில், விவசாயிகள் இந்த உழவு இயந்திரத்தின் மூலம் அதிக அளவிலான உபயோகத்தை பெறமுடியும் என குறிப்பிட்டுள்ளது.

உழவு இயந்திரத்துடன் மின் உற்பத்தி இயந்திரம், நெல் குற்றும் இயந்திரம், பயிர் நடுகை இயந்திரம் போன்றவற்றை இலகுவாக பொருத்தி சிறந்த பலனை அடைய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு

மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் சுற்றாடல் கல்வி விழிப்பூட்டல் தொடர்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள இரண்டு பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் கிளி/முருகானந்தா ம.வி., கிளி/பளை மத்திய கல்லூரி, மு/யோகபுரம் ம.வி., மு/மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றிற்கு சவுக்கு, தேக்கு, சித்திவேம்பு, வாகை என்பன வழங்கப்படவுள்ளன. (அ-3-254)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 190 | 250 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 100-110 | 100-140 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 | 120 |
| தக்காளி | 70 | 90 | 70 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 20-30 | 30 | 30 | 40 |
| கோவா | 80-100 | 120 | 60 | 120 |
| கரட் | 100 | 120 | 80 | 160 |
| பூசணி | 50-60 | 60 | 40 | 60 |
| புடோல் | 100-110 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 40-60 | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 70-90 | 60-80 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 70-90 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 200-250 | 240 | 180 | 180 |
| வெண்டிக்காய் | 80-100 | 100 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 130-150 | 140 | 100 | 160 |
| லீக்ஸ் | 70-100 | 110 | 80 | 110 |
| பீற்றூட் | 40-60 | 60 | 40 | 90 |
| கறிமிளகாய் | 200 | 150 | 100 | 180 |
| முருங்கைக்காய் | 70-80 | 120 | 50 | 100 |
| போஞ்சி | 180-200 | 240 | 80 | 220 |
| கத்தரிதம்புள்ள | -- | 120-200 | 120 | -- |
| கீரை 1 பிடி | 15-20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 200-250 | 180 | 220 | 200-250 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 30 | 30-35 |

## இராசி பலன்

12.11.2012
(ஐப்பசி 27, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
திரயோதசி முற்பகல் 8.58 மணிவரை
சித்திரை பிற்பகல் 5.06 மணிவரை
இராகுகாலம் 7.37-9.07 மணிவரை
சுபநேரம் 12.07-1.37 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர். சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம். கௌரவமான நாள். தொழில் முன்னேற்றம் உண்டு.

**இடபம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. கரைந்துபோன சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும். நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**மிதுனம்** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவுசெய்யும் எண்ணம் உருவாகும். மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும்.

**கடகம்** தொலைதூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம். வாகன சுகம் உண்டு. புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**சிங்கம்** ஆதாயம் அதிகரிக்கும் நாள். நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும். சுபசெய்திகள் வந்து சேரும் நாள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**கன்னி** சில விவாதங்கள் ஏற்படலாம். வியாபாரத்தை விரிபுபடுத்த நினைப்பீர்கள். இன்னபங்கள் இல்லம் வந்து சேரும் நாள். வெளியுலக தொடர்புகள் அதிகரிக்கும். ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**துலாம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். கொடுத்த வாக்கை காப்பாற்ற கொள்கையை தளர்த்த வேண்டி வரலாம். பயணத்தால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்** சேமிப்பு உயர்வடையும் நாள். வழிபாடுகளால் நம்பிக்கை கூடும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிபுக்கு வரும்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பயன் பெறுவீர்கள். தூரதேசத்திலிருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள். மதிப்பும் மரியாதையும் உயர்வடையும். சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். மற்றவர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் உங்களிடமே வந்து சேரும்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீண் பழிகள் அகலும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செயற்படவேண்டிய நாள். ஆதாயம் இல்லாத அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம். உடல் நலனில் அதிக கவனம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம் ஒரு பார்வை

2013-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த வியாழக் கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எந்த வகையான தீர்வை வரவு – செலவுத் திட்டம் கொண்டுவரப் போகின்றது? என்பது மக்களின் பரவலான எதிர் பார்ப்பாக இருந்தது. அந்த வகையில் வரவு செலவுத் திட்டத்தில் சாதக பாதகங்களை கவனிப்பது முக்கியமானது.

முன்னைய காலங்களில் வரவு செலவுத் திட்டம் என்றால் பரந்த அளவில் மக்கள் மத்தியில் எதிர் பார்ப்புகள் காணப்படுவது வழமை. ஏனெனில் வரவு செலவுத் திட்டத்திலேயே அவற்றின் விலை ஏற்ற இறக்கங்கள் அனைத்தும் தங்கி இருக்கும். ஆனால் தற்போதைய நிலைமை அவ்வாறானதல்ல. வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னரும் பின்னரும் விலைவாசிகளில் தாக்கம் ஏற்படுவது வழக்கமாகி விட்டது.

வரவு செலவுத் திட்டத்தின் முதலாம் வாசிப்பைத் தொடர்ந்து இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை இடம்பெற்று அன்றைய தினம் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாவது வாக்கெடுப்பு இடம்பெறும். எட்டுத் தினங்கள் இடம்பெறும் இவ்விவாதத்தை அடுத்து எதிர்வரும் 19ம் திகதி திங்கட்கிழமை இருதரப்பு இணக்கப்பாடுகளின் அடிப்படையில் முக்கிய 22 அமைச்சுகளுக்கான குழுநிலை விவாதம் டிசம்பர் 8ம் திகதிவரை 16 தினங்களுக்கு இடம்பெற ஏற்பாடாகி உள்ளது. இதன்படி ஒவ்வொரு அமைச்சு மீதான விவாதத்திற்கும் 2 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை, நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டு விவாதிக்கப்பட உள்ளன.

இறுதியில் சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 8 திகதி மாலை 6 மணியளவில் இடம்பெற உள்ளது.

இருப்பினும் அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ளதால் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

2013-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினை சபையில் சமர்ப்பித்த ஜனாதிபதி சுமார் 2 1/2 மணிநேரம் உரையாற்றினார்.

அவரது உரை 49 தலைப்புகளில் அமைந்திருந்தது.

ஒட்டுமொத்தமாக வரவு செலவுத் திட்டத்தை நோக்கின்...

- அரசாங்க ஊழியர்களுக்கு 1,500 ரூபாய் சம்பள அதிகரிப்பு.
- ஓய்வூதியக்காரர்களுக்கு ரூ. 500 - 750 வரை விஷேட கொடுப்பனவு.
- வாகன இறக்குமதி வரி 10 - 20 வீதம் அதிகரிப்பு.
- வெளிநாட்டவர்களுக்கு காணிகள் விற்க முற்றாகத் தடை.
- இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளுக்கு கூடுதல் வரி.
- வறுமை ஒழிப்பு செயற்பாடுகளுக்கு 15000 மில்லியன் ரூபா.
- 1980இல் பொது வேலை நிறுத்தத்தில் பாதிக்கப்பட்டு நிரந்தர வருமானம் இல்லாத 65 வயதிற்கு மேற்பட்டோருக்கு 5000 ரூபாய்.
- வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன் வட்டி ரத்து.
- நெல் கொள்வனவுக்கான உத்தரவாத விலை ரூ. 32 – 35 ஆக உயர்வு.
- பின் தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு இலவச தானிய உணவு, பால், முட்டை, மேலதிகமாக ஒரு சோடி சீருடை, ஒரு சோடி பாதணிகள்.
- வெளிநாட்டு மதுபானங்களின் இறக்குமதி தீர்வை 25 வீதம் அதிகரிப்பு.
- வாகன லைசன்ஸ் கட்டணம் அதிகரிப்பு.
- தேசிய நல்லிணக்க செயற்பாடுகளுக்கு மேலும் 500மில்லியன் ரூபாய்
- இலவச விதை நெல்.
- அடுத்த மூன்று ஆண்டுகளில் 1,000 லக் சதொச விற்பனைக் கூடங்கள் அமைக்க 500 மில்லியன் ரூபாய்.
- ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தென்னங்கன்று இலவசம்.
- உள்ளூராட்சி மன்றங்களால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கான தீர்வைகள் ரத்து.
- மாகாண ஆசிரியர் பயிற்சிக்கு 900 மில்லியன் ரூபாய்.

என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

அத்துடன் ஜனாதிபதி ஆற்றிய வரவு செலவுத் திட்ட உரையின் புத்தக வடிவம் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதில் பொருளாதார வளர்ச்சிக்காக புதிதாக கிடைக்கப்பெற்ற சூழலின்பால் வடக்கு மக்கள் காட்டுகின்ற ஆர்வம் மிகவும் உறுதியானதாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை, நாட்டிலிருந்து வறுமையை ஒழிப்பதை நோக்காகக் கொண்டே 2013ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதாரத்தின் பங்களிப்பை நேரடியாக நாட்டின் அபிவிருத்திக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் நாடு இடைக்கால பொருளாதார கொள் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக இந்த வரவு செலவுத் திட்டத்தை நோக்கின், 30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிவாரணத்தின் பொருட்டு எந்தவிதமான நேரடி உதவியும், நிதி ஒதிக்கீடும் இல்லாதிருப்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மக்களின் நலன்புரி திட்டங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





அத்துடன் பொருட்களின் விலையேற்றத்தால் தவிக்கும் மக்களுக்கு வகையிலேயே முன்வைக்கப் பட்டன. எனினும் அரச ஊழியர்களுக்கு ரூபா 1,500 கொடுப்பனவே வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக அயராது உழைத்து ஓடாய்த் தேய்ந்துபோன பெருந்தோட்டத்துறை மக்களின் ஈடேற்றத்திற்கு நேரடி ஒதுக்கீடுகள் எதுவும் இல்லாதிருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

அதேவேளை சாதாரண வருமானம் பெறும் குடும்பங்கள் பலவும் தமக்கென ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்யவேண்டும் என்பது அவர்களின் நீண்ட காலக் கனவு. எனினும் வாகனங்களின்

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்




## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பற்றி எதுவும் இல்லை!

கையுடைய நாடாக மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

**ஐ.தே.கட்சி எதிர்ப்பு**

இதேவேளை, 2013க்கான வரவு செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டிருக்கவில்லை. பொருளாதார கஷ்டங்களால் துன்பப்படுகின்ற மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களும் இல்லை என அக்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு வங்கிகளில் உள்ள நிதிகளை வேறு கணக்குகளுக்கு மாற்ற அனுமதி அளித்துள்ள, பந்தயக் கார்களின் வரிகளைக் குறைத்துள்ள இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் பெரும் பணக்காரர்களுக்கானது எனவும், இது பரந்துபட்ட மக்களுக்கு எந்த ஒரு நிவாரணத்தையும் கொடுக்கவில்லை எனவும்,

நாட்டின் 99 வீதமான மக்களை அரசு கஷ்டத்தில் விட்டுள்ளது. யாருக்கு பந்தயக் கார் தேவை? மேலும் வரவு செலவுத் திட்டத்தில் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், கடின உழைப்பாளிகள் எவரும் கவனத்தில் கொள்ளப்படவில்லை என ஐ.தே.த உறுப்பினரும், பொருளாதார வல்லுநருமான ஹர்ஷா டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் தனியார் துறையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றார்.

இதேவேளை, 2013 வரவு செலவுத் திட்டத்தில் சில முக்கிய சலுகைகள் முதலீட்டுச் சந்தையைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதில் பிரதானமான 2013 டிசம்பருக்கு முன்னர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டு 20 வீதமான பங்குகளை பொதுமக்கள் மத்தியில் பேணும் கம்பனிகளுக்கு 3 [illegible] வருமான வரியில் [illegible] வீத வரிவிலக்கு வழங்கப்பட்டமை பெருமளவான கம்

க்கு எந்தவிதமான நன்மைகளையும் இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை ஒன்றிணைக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் சம்மேளனம் 10,000 ரூபாய் சம்பள உயர்வு கோரியிருந்தது. ஜே.வி.பியும் 13,438 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்தது. இவையாவும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாதிருக்கும் மக்களின் துயரைத் துடைக்கும்

இறக்குமதி வரி தொடர்ச்சியாக அதிகரித்து இருப்பது அவர்களைக் கவலை கொள்ளச் செய்திருப்பதுடன், வாகன விற்பனையையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

மக்களைப் பொறுத்தளவில் தமது பொருளாதார நெருக்கடிகளை போக்கும் வகையில் அரசு நிவாரணங்களையும் மானியங்களையும் வழங்கும் என்றே எதிர்பார்த்தனர். எனினும் அவ்வாறான நிவாரணங்கள் இல்லாதிருப்பது ஏமாற்றமாகவே இருக்கும்.

*வரவு செலவுத்திட்டச் சுருக்கம் (2011-2013)*

ரு.மில்

| | 2011 | 2012 | 2013 வ.செ.தி |
|---|---|---|---|
| மொத்த வருமானமும் மாளிபங்களும் | **949.9** | **1,075.0** | **1,277.9** |
| மொத்த வருமானம் | **934.8** | **1,055.0** | **1,257.[illegible]** |
| வரி வருமானம் | 812.6 | 920.9 | 1,132.0 |
| வருமான வரி | 157.3 | 184.3 | 221.9 |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 468.0 | 515.5 | 632.9 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி | 187.3 | 221.1 | 277.2 |
| வரியல்லாத வருமானம் | 122.2 | 134.1 | 125.9 |
| மானியங்கள் | **15.1** | **20.0** | **20.0** |
| மொத்த செலவினம் | **1,400.1** | **1,540.2** | **1,785.4** |
| மீண்டெழும் | 1,006.6 | 1,113.3 | 1,267.4 |
| சம்பளங்களும் கூலிகளும் | 319.6 | 364.4 | 414.4 |
| ஏனைய பொருட்கள் மற்றும் செலவுகள் | 113.7 | 123.3 | 140.4 |
| வட்டிக் கொடுப்பனவு | 356.7 | 393.7 | 444.8 |
| உதவு தொகைகளும் மாற்றங்களும் | 216.6 | 231.9 | 267.8 |
| அரசாங்க முதலீடு | 407.5 | 437.3 | 529.6 |
| கல்வியும் சுகாதாரமும் | 37.1 | 46.4 | 59.6 |
| பிற உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 370.4 | 390.9 | 470.0 |
| பிற | (14.0) | (10.4) | (11.7) |
| வருமான மிகை (+)/பற்றாக்குறை(-) | (71.8) | (58.3) | (9.4) |
| வ.செ.தி பற்றாக்குறை (+)/பற்றாக்குறை(-) | *(450.2)* | (465.2) | (507.4) |

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5532.32 | 5589.43 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5071.35 | 5152.98 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 2997.95 | 3034.6 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 2,168.187

***உயர்வடைந்தபங்குகள்(5)*** சிலிசிங்(1349.90),ஜி.எஸ்.பினான்ஸ்(741.00) ,போகல ஹாபைற்(29.00),என்வெயர் றிசோசஸ்(w)(5.50),உடபுசலாவ( 30.80).

***சரிவடைந்தபங்குகள்(5)*** ஹீல்ஸ் பூட்(70.80),ஆஸிரி சென்[illegible], அமாயா லிசர்(75.00), யூனியன் கெமிக்கல்(511.00),மக்வூட்ஸ் [illegible]

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.40 | 132.35 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.37 | 212.06 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 164.20 | 169.44 |
| சுவிஸ் பிராங் | 135.93 | 140.91 |
| கனேடிய டொலர் | 128.61 | 133.07 |
| அவுஸ்திரேலிய டொலர் | 133.69 | 138.62 |
| சிங்கப்பூர் டொலர் | 105.13 | 108.64 |
| ஜப்பான் யென் | 1.61 | 1.67 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.41 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.65 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை

## கவனம் செலுத்துவோம் என்கிறார் பாலித

காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பாலித கோஹண தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 98 ஆவது அமர்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் சட்டவிரோத, காணாமல் போதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு சிலரிடம் கேள்வியெழுப்பியிருந்தது.

மேலும் 17 சம்பவங்கள் தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்தப்பட வேண் டும் எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது. இதற்கு பதிலளித்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் இதற்கான விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. காணாமல் போதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகவே பிரதிக் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

100 காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் அறிக்கைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனைய குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும். சித்திரவதைகளை தடுத்தல் உள்ளிட்ட பல்வேறு மனிதவுரிமை மீறல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

மேலும் இப்பேரவையின் பூகோள கால கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரிலும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மனிதவுரிமைகள் மேம்படுத்தப்படுவதாக குறிப்பிட்டிருந்தார்.

ஆயினும் இவரது கருத்துக்களை மறுத்த சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையின் உறுதி மொழிகளை நம்ப முடியாது என குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் இலங்கையில் நீதித்துறை தாக்கப்படுவதாகவும் அது மேலும் குற்றம் சுமத்தியிருந்தது. சட்டவிரோத பலவந்த காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பிலான விசேட அமர்வுகளில் இலங்கை தொடர்பிலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com


# தற்காலிக இடைநிறுத்தம்

(கொழும்பு)

வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத தனியார் பேருந்துக்கள் மற்றும் நீண்ட தூர சேவையை மேற்கொள்ளும் பேருந்துக்களுக்கு தரம் குறைந்த உணவுகளை வழங்கும் உணவகங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது

இத் தகவலை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன வெளியிட்டுள்ளார்

இந்த நடைமுறைக்கு பல்வேறுபட்ட தரப்பினரால் அழுத்தம் பிரயோகிக்கப்படுவதை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ஷிராணி மீதான கண்டன தீர்மானம் குறித்து ஜனாதிபதியுடன் பேச முடிவு

## சுயாதீன சட்டத்தரணிகள் அமைப்பு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை பதவி நீக்குவதற்காக அரசாங்கம் கொண்டுவந்துள்ள கண்டனத் தீர்மானம் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடமும் சபாநாயகரிடமும் கோரிக்கை விடுப்பதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் ஏனைய சுயாதீன சட்டத்தரணிகள் அமைப்புகளும் தீர்மானித்துள்ளன.

பிரதம நீதியரசருக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றக் கூடாது என்று சட்டத்தரணிகள் நீண்டநேரப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் தெரிவித்தார்.

அரசாங்கம் தொடர்ந்தும் கண்டன தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்தால், அந்த விசாரணை நடக்கவேண்டிய முறைபற்றி சபாநாயகருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளதாக சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

பிரதம நீதியரசர் மீதான விசாரணைகளை கண்காணிக்க ஓய்வுபெற்ற நீதியரசர்களுக்கு அவகாசம் வழங்கவேண்டும் என்ற யோசனையொன்றும் சட்டத்தரணிகளின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் மீதான நாடாளுமன்றத்தின் குற்றப்பிரேரணை விசாரணைகள் சுதந்திரமாக நடப்பதை உறுதிசெய்வதற்கு சட்டத்தரணிகள் இந்த தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதாக ப்ரீ மார்ச் சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க கூறினார். (அ-2)


மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 4<br>உயரம்:- 5'<br>கி.பா:-49.25<br>தகைமை:-பொறியியலாளர் (அவுஸ்திரேலியா) Computer B/343 | பிறப்பு:- 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுசம் 3<br>உயரம்:- 5'3"<br>கி.பா:-36, 2 இல் செவ்வாய்<br>தொழில்: Bsc Acs ஆசிரியை (விவாகரத்து பெற்றவர்) விவாகரத்து செய்தவர்கள் ஏற்கப்படும் G/352 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புனர்பூசம் 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-37, 2 இல் செவ்.<br>தொழில்:-A/L சாரதி B/344 | பிறப்பு:-1968 R.C<br>தகைமை:-ஆசிரியை<br>எ.பா:-பொருத்தம் பார்ப்பது இல்லை G/353 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 1<br>உயரம்:-5'6"<br>கி.பா:-55, 1இல் செவ்.<br>தகைமை:-ஆசிரியர் B/346 | பிறப்பு:- 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'3"<br>கி.பா: 41, 8 இல் செவ்<br>தகைமை:-O/L G/358 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-71, 8 இல் செவ்.<br>தகைமை:- Marketing Executive நிரந்தரம் B/347 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம்<br>உயரம்:-5'5"<br>கி.பா: 30.25<br>தகைமை:- ஆசிரியை விவாகரத்து பெற்றவர் (திருமண எழுத்து மட்டும்) விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் G/365 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


# முள்ளிக்குள மக்களை சந்திக்க மல்கம் ஆண்டகை பயணிப்பார்

(மன்னார்)

மன்னார் முள்ளிக்குளம் கிராம மக்களை மீண்டும் அவர்களின் சொந்த கிராமத்தில் குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிப்பதற்காக பேராயர் மல்கம் ரஞ்சித் மற்றும் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் விரைவில் முள்ளிக்குளத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

2007 ஆம் ஆண்டு தமது சொந்த கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முள்ளிக்குளம் மக்கள் தற்போது மறிச்சுக்கட்டி காட்டுப் பகுதியில் வசித்து வருகின்றனர். அத்துடன் அவர்கள் பாரிய இன்னல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

உரிய வீடுகள் மற்றும் வாழ்வாதாரம் இன்றி கஷ்டப்படும் தமக்கு போர் முடிந்த பின்னரும் சொந்தக் கிராமங்களுக்கு செல்வதற்கான வழிவகைகள் செய்து தரப்படவில்லை என்று அந்த மக்கள் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள், அண்மையில் பேராயருக்கு முறையிட்டமையை அடுத்து பேராயரும் பாதுகாப்பு செயலாளரும் முள்ளிக் குளத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். (அ-2)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்

WESTERN UNION MONEY TRANSFER

- உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும்
- உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்



Dialog தொலைபேசி அட்டைகள்

(சி-1483)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No:-0212225392
E.mail:- srimurugan09@gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீபாவளிக் கொண்டாட்டத்தில் திளைக்கிறது யாழ்ப்பாணம்

## யுவதிகள் மீதும் அங்க சேஷ்டை


(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் தீபாவளிக் கொண்டாட்டம் ஆரம்பித்துள்ள நிலையில் யுவதிகள் மீதான சேஷ்டைகளும் அதிகரித்திருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான இளம்பெண்கள் மீதான சேஷ்டைகள் முனியப்பர் வீதியில் நடைபாதை புடைவை வியாபாரம் இடம்பெறுகின்ற இடங்களிலேயே அதிகரித்துக் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

குறித்த பகுதியில் காணப்படும் மிகையான சன நெரிசலினை பயன்படுத்தி இச் சேஷ்டைகள் அரங்கேறுகின்றன. ஆடைகள் கொள்வனவு செய்யாத இளைஞர்களும் இப்பகுதியில் சேஷ்டை புரிவதற்காக அலைந்து திரிவதாகவும் கூறப்படுகின்றது.

இதனை விட இங்கு காணப்படுகின்ற கடைகளில் வேலை செய்கிறவர்களும் ஆண்கள் பெண்கள் என்று கூடப் பாராது கையை பிடித்து இழுத்து தம்மிடம் ஆடைகளினை கொள்வனவு செய்யுமாறு அழைப்பதாகவும் தெரியவருகின்றது. (அ-4)




நன்றி:- மிரர்.

# யாழ்.போதனாவில் 15 ஆம் திகதி சுகவீன விடுப்புப்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். இச் சுகயீன விடுப்பு போராட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டுமல்லாது நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகள் அனைத்திலும் இடம்பெறும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

சம்பள அதிகரிப்பு, தொலைபேசிக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவை 1/90 ஆல் பிரிக்க வேண்டும், பட்டதாரி மாணவர்களுக்கு தாதியர் நியமனங்களை வழங்குதல், வேலை நாளை வாரத்திற்கு 5 நாட்களாக மாற்றுதல், தாதிய சபையினை உடனடியாக இயங்க நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றினை நடைமுறைப்படுத்தக் கோரியும் மாகாண அடிப்படையிலான தாதியர் ஆட்சேர்ப்பினை உடனடியாக நிறுத்தக் கோரியுமே இச் சுகயீன விடுப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்திய சாலை அரச,தாதியர் சங்கத்தினர் தெரிவிக்கையில்,

நாம் எமது கோரிக்கைகளினை நிறைவேற்றக் கோரி பல கட்டங்களாக பல்வேறு முறைகளில் எமது போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் அரசு அதனை கண்டும் காணாது போல் செயற்படுகின்றது.

மக்களுக்கு சேவை செய்யும் தாதியர்களினை அரசு இழிவுபடுத்த நினைக்கின்றது. எத்தனையோ போராட்டங்கள் இடம்பெற்ற போதிலும் அதன் தாக்கத்தினை உணர்ந்தும் அரசு எமக்குரிய கோரிக்கைகளில் சிலவற்றினையேனும் நிறைவேற்றவில்லை.

இதுவரை காலமும் நடைபெற்ற எமது போராட்டங்களினால் நோயாளர்கள் மிகவும் குறைவாகவே பாதிக்கப்பட்டு இருந்தனர். நோயாளர்களின் நலன்கருதியே அவர்களுக்கு பாதிப்பேற்படாத வகையில் நாம் எமது போராட்டத்தினை கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்தோம்.

அந்த வகையில் தாதியர்களின் போராட்டத்தின் தாக்கம் குறைவாகவே காணப்பட்டது. ஆதலால் எமது போராட்டத்தின் வலிமையின் தாக்கத்தினை அரசிற்கு உணர வைப்பதற்காகவே இச் சுகயீன விடுப்பு போராட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

இச் சுகயீன விடுப்பு போராட்டம் எமது தாய்ச்சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு 15 ஆம் திகதி முழுநாளும் இப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதன்போது மிகவும் சொற்பளவிலான தாதியர்கள் மட்டுமே கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

இதனால் வெளிநோயாளர் பிரிவு உட்பட பல பிரிவுகள் செயல் இழக்கும் நிலை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இப் போராட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்களுக்கு காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யக்கோரியும் அவற்றை வலி யுறுத்துவதாகவும் அமையும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (அ-4)




# அனல் பறக்கிறது தீபாவளி வியாபாரம்



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தீபாவளி வியாபாரம் தற்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. யாழ். நகர்ப்பகுதியில் அதிகளவான நடைபாதை வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு பெருமளவான பொதுமக்கள் பொருட்களை நுகர்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நடைபாதை வியாபாரத்தில் வியாபாரிகள் அதிகளவில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதோடு வர்த்தக நிலையங்களுக்கு சென்று பொருட்களை நுகர்வோரின் எண்ணிக்கை குறைவாகவுள்ளதையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது. யாழ்.நகர்ப் பகுதியில் முனீஸ்வரன் வீதியிலும் யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள வீதியிலும் புல்லுக்குளத்திற்கு அருகாமையிலும் அதிகளவான நடைபாதை வியாபாரிகள் முகாமிட்டுள்ளனர். (அ-6)

# சேட்டை புரிந்தோருக்கு விழுந்தது தர்ம அடி

(மிருசுவில்)

வெளிநாட்டு பிரஜைகளுடன் சேட்டையில் ஈடுபட்ட இளைஞர் குழு ஒன்று அவர்களிடம் அடி வாங்கிய சம்பவம் ஒன்று அண்மையில் கசூரினா கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது,

சம்பவதினத்தன்று வெளிநாட்டில் இருந்து வந்த சில வெள்ளை இனத்தவர்கள் கசூரினா கடற்கரையில் தமது பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தனர். இவ்வேளையில் அங்கு மதுபோதையில் நின்ற இளைஞர் குழு ஒன்று அங்கு நின்ற வெள்ளை இனத்தவர்களுடன் சேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் இவற்றையெல்லாம் பொறுத்த வெள்ளை இனத்தவர்கள் தமது மதிய உணவை உண்ணும் போது அவ் இளைஞர் குழு உணவிற்குள் மண்ணை அள்ளி வீசவே பொறுமை இழந்த அவர்கள் இவ் இளைஞர்களை பிடித்து சரமாரியாக தாக்கியுள்ளனர்.

அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் இளைஞர்களை தம்மிடம் ஒப்படைக்கும்படி கூற அதனை மறுத்த வெள்ளை இனத்தவர்கள் அவ் இளைஞர்களை வெளிநாட்டு பணியகத்தில் ஒப்படைக்கப் போவதாக கூறினர்.

எனினும் பொலிஸாரின் சமரசத்திற்கு பின் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர். (அ-3-85)

# ஆன்மீக வகுப்புக்கள்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக வகுப்புக்கள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் செட்டித் தெரு ஒழுங்கையில் உள்ள சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகின்றன.

இவ் வகுப்புக்களில் தியானப்பயிற்சி வகுப்பு, உபநிடத வகுப்பு, தகவல் கீதை விளக்கவுரை, சின்மய யுவகேந்திரா வகுப்பு ஆகியன இடம்பெற்று வருகின்றன. இவ் வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன. (அ-3-134)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அகவொளி உயர்கல்வி நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் அகவொளியில் நடைபெறவுள்ளது.

யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ். ஹென்றி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகண்டா ஜனாதிபதி இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

உகண்டா நாட்டின் ஜனாதிபதி யவ்ரி குகோட்டா இலங்கைக்கு வருகை தரவுள்ளார். மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொள்ளும் அவர் இன்று திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய இராஜதந்திரிகளை சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பேதங்களை கருத்தில் கொள்ள வேண்டாம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

சுகாதார அமைச்சு மற்றும் மாகாணசபை சுகாதார அமைப்பில் பணியாற்றுபவர்கள் சரிசமமாகவே கணிக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடொன்றில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது பேதங்களை கருத்தில் கொள்வது அவசியம் அற்றது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே தாதியர்களை சேவையில் இணைத்துக் கொள்வது உள்ளிட்ட பல நடவடிக்கைகளின் போது குறித்த மாகாணசபை மற்றும் சுகாதார அமைச்சிற்கு இடையே சில முறுகல் நிலை ஏற்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கும்பாபிஷேகம்

(பூந்தோட்டம்)

வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் தேவஸ்தானத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ நா.பிரபாகரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இக்கும்பாபிஷேகத்தின் முதல்நாளான 29 ஆம் திகதி காலை 9 மணி முதல் 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும். (அ-9-266)

# இந்திய பிரஜை கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஐந்து இலட்சத்து 38 ஆயிரம் இந்திய ரூபாய்களுடன் சிங்கப்பூர் நோக்கி பயணிக்க தயாரான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய பிரஜையான குறித்த நபர் நேற்றையதினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து மீட்கப்பட்ட பணத்தின் இலங்கை பெறுமதி 12 இலட்சத்திற்கும் அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

38 வயதான இவர் ஒரு வியாபாரி என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# செக்கரிபாயவிற்கு 13 அமைச்சுக்கள்

(கொழும்பு)

பத்தரமுல்லையில் செக்கரிபாயவிற்கு அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்திற்கு 13 அமைச்சுக்கள் கொண்டு செல்லப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

சனத்தொகை மற்றும் கணக்கெடுப்பு திணைக்களம் விரைவில் இக்கட்டடத்தில் இயங்கப்பெறுமென அத் திட்டத்தின் ஆலோசனைப் பணிப்பாளர் ரேணுகா விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் துறைமுகம், பெருந்தெருக்கள், தேசிய உரிமைகள், கடற்றொழில், நீர்வடிகால் அமைச்சு மற்றும் சமூக சேவைகள் உள்ளிட்ட அமைச்சுக்களே எதிர்வரும் ஆண்டு தை மாதம் முதல் குறித்த கட்டடத்தில் இயங்கப் பெறவுள்ளதாக மேற்குறித்த திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# கஹவத்தயில் கொலை முயற்சி

கஹவத்த, திம்புல்ஹல்வல பிரதேசத்திலுள்ள வீடொன்றினுள் நுழைந்த நபரொருவர் அங்கிருந்தவர்களைக் கூரிய ஆயுதத்தினால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக கஹவத்த பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# தெலிசீமியாவால் பலர் பாதிப்பு

(கொழும்பு)

தெலிசீமியா நோய் காரணமாக வடமேல் மாகாணத்தில் மாத்திரம் 14 ஆயிரம் பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இத் தகவலை தேசிய தெலிசீமியா மத்திய நிலையத்தின் மருத்துவர் தயானந்த பண்டார வெளியிட்டுள்ளார். சுகாதாரத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டில் 7 சதவீதமான நிதி இந்த நோய் தடுப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BRITISH COLLEGE OF HIGHER STUDIES நிறுவனம் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இன்று கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கல்முனை பிரதேசங்களில் கிளைகளை நிறுவி கல்விச் சேவையில் ஒரு மகத்தான பணியினை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம் ஆங்கிலத்திற்கு அதி முக்கியத்துவம் கொடுத்து பலவகையான கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இவற்றில் சர்வதேச கற்கை நெறிகளையும் மற்றும் இக்கல்வி நிறுவனத்தினால் விசேடமாக உருவாக்கப்பட்ட கற்கைநெறிகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

British College of higher studies நிறுவனத்தின் இத்தகைய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பல காரணங்களை கூறலாம்.

- பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆங்கிலம் கற்பித்தலில் புலமை பெற்ற நிபுணர்களை உள்ளடக்கிய குழாம் மூலம் உருவாக்கப்பட்ட விசேட பாடத்திட்டம்.
- ஒவ்வொரு கற்கை நெறியும் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் மூலம் கற்பித்தல்.
- 12 இற்கும் மேற்பட்ட விரிவுரையாளர்களை கொண்ட சிறந்த கற்பித்தல் குழாம்
- நவீன தொழில்நுட்பங்கள் Visuals மூலம் சிறந்த நடைமுறைப் பயிற்சிகள், ஆங்கில அறிவு குறைந்தவர்களுக்கு தனிப்பட்ட கவனம் மற்றும் ஒழுக்க கட்டுப்பாடுகள்.
- அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்



BCHS நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறிகள்

- City & Guilds- $A_1$ English Exam

U.K இல் உள்ள ஒருவர் திருமணத்தின் பின்னர் தனது கணவன் /மனைவிக்கு U.K நிரந்தர வதிவிட விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் இலங்கையில் உள்ள கணவன்/மனைவி $A_1$ English Exam ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

BCHS இப்பரீட்சையின் முகவராக செயற்படுவதுடன் தனது கிளைகளிலேயே மாணவர்கள் பரீட்சை நிலையமாக தெரிவு செய்வதற்கு வசதியினை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர்.

இதுவரை 650 மாணவர்கள் இப்பரீட்சையினை பூர்த்தி செய்திருப்பதுடன் தற்போது 64 மாணவர்கள் October மாத பரீட்சை எழுத தங்களை பதிவு செய்துள்ளனர். இங்கு மிகச் சிறந்த கற்பித்தல் முறை காரணமாக $A_1$ பரீட்சை பெறுபேறுகள் வெற்றிகரமாக அமைகின்றன.

- City & Guilds- $B_1$ English Exam

Student visa மூலம் U.K செல்வதற்கு தீர்மானித்துள்ள மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தி அடைந்தால் மட்டுமே U.K செல்வது சாத்தியமாகும். இப்பரீட்சைக்கும் இந்நிறுவனத்தின் கிளைகளிலேயே தோற்ற முடியும். இப்பரீட்சையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் U.K இல் Certificate /Diploma Level இல் இருந்து தமது கற்கை நெறிகளை தொடர முடியும்.

## விளம்பர விபரணம்

- IELTS - International English Language System

U.S.A, Canada, Australia, New Zealand, U.K. போன்ற நாடுகளுக்கு மாணவர்கள் செல்வதற்கு இப்பரீட்சை மிக முக்கியமானது. இப்பரீட்சையில் எடுக்க வேண்டிய புள்ளிகளின் அளவு ஒவ்வொரு நாட்டுக்கும் வேறுபடும். BCHS நிறுவனம் இப்பரீட்சைக்குரிய முகவராக தொழிற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- Spoken English With Grammer

இக்கற்கை நெறி 6-8 கிழமைகளை உள்ளடக்கியதான துரித பயிற்சி நெறியாக காணப்படுகின்றது. ஆங்கிலப் புலமையில் சிறந்து விளங்கும் ஆசிரியர் குழாமினால் சர்வதேச தராதரத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட ஒரு பாடத்திட்டத்தினை அடிப்படையாக கொண்டு இப்பாடநெறி கற்பிக்கப்படுகின்றது. இப்பாடத்திட்டம் இந்நிறுவனத்திற்கு என பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டிருப்பதுடன் குறுகிய காலத்தில் ஆங்கில அறிவை பெறுவதற்கும் பெரும் வாய்ப்பாக அமைகிறது.

- Diploma/ Advance Diploma In English

இப்பாடநெறிகள் ஆங்கிலத்தில் ஓரளவு புலமை உள்ளவர்களுக்காக உருவாக்கப்பட்ட பாடத்திட்டம். இது இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களை உள்ளடக்கியதாக உள்ளது. Spoken English with Grammer பாட நெறியை பூர்த்தி செய்தவர்கள் தொடர்ந்து தமது ஆங்கில அறிவை பெருக்கி கொள்வதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- Young Learners for English

இது ஒரு சர்வதேச பரீட்சையாகும். 7-12 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு என BCHS இனால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கற்கைநெறி. பெற்றோர்கள் ஆங்கிலத்தின் தற்போதைய முக்கியத்தை உணர்ந்து சிறுபராயத்திலேயே பிள்ளைகளுக்கு இப்பாடநெறிகளை கற்பிப்பதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்கு பெற்றுத்தர முடியும். இப்பாடநெறியானது தொடர்ந்து பல நிலைகளை (Levels) கொண்டு இருப்பதால் இந்நிலைகளை பூர்த்தி செய்து ஆங்கிலத்தில் ஒரு பட்டதாரியாக வெளிவர முடியும். ஒவ்வொரு பரீட்சை முடிவிலும் University of Cambridge நேரடியாக வழங்கும் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுத்தரும்.

மேலும் British College of higher studies நிறுவனத்தின் சகோதர நிறுவனமான Express International Studies & Consultants மாணவர்களை Student visa மூலம் உயர்கல்விக்கு அனுப்புதல் Settlement Visa, Tourist Visa, Family Visit Visa மற்றும் அனைத்து விசாக்களுக்குமான ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் ஆவணங்களை தயார்படுத்தல் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் சட்டத்தரணிகளாக விளங்குவதால் Appeal தொடர்பில் இலங்கையில் இருந்தே Paper Arguments மூலம் வெற்றி பெற்று கொடுக்கிறார்கள். இது U.K இல் solicitor / barrister களை நியமிப்பதை தவிர்த்து செலவீனங்களை கட்டுப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இங்கு British College of higher studies இன் பணி முடிவடைந்ததும் Express International Studies & Consultants தனது பணியினை தொடர்வதன்மூலம் தமிழ் பேசும் சமுதாயம் ஒரே கூரையின் கீழ் தமக்கு தேவையான சேவைகளை பெற்றுக் கொள்ள முடிகிறது. எனவே இவ்விரு நிறுவனங்களின் சேவை மேலும் தொடர வேண்டும் என்பதுடன் எமது மக்கள் இவ்வாய்ப்புக்களை தவறவிடாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது முடிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

278

## துணை நின்ற தெய்வம்

சில நாட்களாகவே விடாமல் பெய்த மழை காட்டையே வெள்ளக்காடாக்கியது. பறவைகள் வானில் பறக்க முடியாமல் தங்கள் கூடுகளுக்கு உள்ளேயே பதுங்கிக் கிடந்தன.

பெரும்பாலான பறவைகள் புத்திசாலிகள்! மழைக்காலம் வரப்போவதை முன்கூட்டியே உணர்ந்து வசதியாக கூடுகளை அமைத்துக் கொண்டு உணவுப் பொருட்களையும் சேர்த்து வைத்திருந்தன.



அந்தப் பறவைகளில் ஒன்று ராபின். உணவுப் பொருட்களை முன்கூட்டியே சேர்த்து வைத்திருந்ததால் மழையில் வெளியில் எங்கும் செல்லாமல் தன் கூட்டுக்குள் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டு தன்னுடைய குழந்தைப்பருவத்தைப் பற்றிய நினைவுகளில் ஆழ்ந்திருந்தது.

தன் அப்பா தனக்குப் பறக்கக் கற்றுக் கொடுத்தது, தன் அம்மா பழத்தை தன் வாயில் ஊட்டி விட்டது போன்ற இனிய நினைவுகளில் லயித்துப் போயிருந்த சமயம், திடீரென ராபின் என்று யாரோ அழைப்பது கேட்டு எட்டிப் பார்த்தால் அதன் நண்பன் சிட்டி நின்று கொண்டிருந்தது.

ஹாய்! வாடா, வா! நான் உன்னைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். நீயே வந்து விட்டாய், வா! என்று மகிழ்ச்சியுடன் தன் நண்பனை வரவேற்றது.


சும்மா உன்னைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். என்னடா! மழையில் நனைந்து கொண்டே உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன், உன் மனைவியிடம் எனக்குக் குடிக்க ஏதாவது சூடாக தரச்சொல்லக் கூடாதா! என்று, உரிமையுடன் கேட்டது சிட்டி.

அவளால் முடியாது. ஏனெனில் அவள் சில நாட்களுக்கு முன்னால் முட்டையிட்டு இருக்கிறாள். அவற்றை அடை காத்துக் கொண்டிருக்கிறாள் என்றது ராபின்.

அடடே! அப்படியா! நீ அப்பாவாகப் போகிறாயா? வாழ்த்துக்கள்! சரி, சரி! குஞ்சு பொறித்த பின்பு நான் உன்னுடைய கூட்டுக்கு வந்து விருந்து சாப்பிடுகிறேன் என்றது.

பின்பு ராபின் அளித்த பழங்களைத் தின்று கொண்டே நண்பர்கள் இருவரும் மனம் விட்டுப்பேசும்போது திடீரென உஸ்ஸ்ஸ் என்ற ஓசை கேட்டது. இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால்... ஒரு பயங்கரமான பாம்பு கூட்டின் வாயிலில் நின்று கொண்டிருந்தது.

கிளித்தம்பிகளா! நான் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. இப்போது நான் உள்ளே வந்து உங்கள் இருவரையும் தின்னப் போகிறேன் என்று கூறியபடி உள்ளே நுழைய முயற்சித்தது.



ஐயோ! தெய்வமே! காப்பாற்று! என் மனைவியால் தனியாகக் குஞ்சுகளைக் கவனிக்க முடியாது. என் குஞ்சுகள் வளரும் வரை என்னைக் காப்பாற்று என் மனைவியைக் காப்பாற்று, என் நண்பனையும் காப்பாற்று என்று தீனமாக ராபின் அலறியது.

அடுத்த விநாடி கடவுளே அதற்குப் பதிலளிப்பது போல் வானில் பயங்கர மின்னலுடன் இடிஇடிக்க திடீரென கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் ஏதோவொன்று மரத்தைத்தாக்க, மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பாம்பு இடியால் தாக்கப்பட்டு சுருண்டு விழுந்தது. கிளிகள் அடிமரத்தில் பொந்தினுள் இருந்ததால் இடியின் பாதிப்பில் இருந்து தெய்வாதீனமாகத் தப்பின.

தெய்வமே! தெய்வமே! எங்கள் பிரார்த்தனைக்கு செவி சாய்த்து அருள்செய்த கருணைக்கடலே! என்று ராபினும் சிட்டியும் தெய்வத்திற்கு நன்றி கூற வெளியே மீண்டும் பலமாக மழை பெய்யத் தொடங்கியது.

## அன்புக்கு அடிமை

ஒருநாள் ரங்கா தன் மாமாவுடன் பீச்சுக்குச் சென்றான். அங்கு அவன் மாமாவுக்கு அரட்டையடிக்க அவர் நண்பர்களில் ஒருவர் கிடைக்க ரங்கா தனித்து விடப்பட்டான்.


சற்றுத்தொலைவில் பீச் மணலில் ஓர் ஆமை நகர்ந்து செல்வதைப் பார்த்து ரங்கா உடனே அதன் அருகே சென்றான்.

அவனை மிக அருகில் பார்த்ததும் ஆமை தன் தலையை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டு அசையாமல் நின்றது.

ஆமை நகருவதைப் பார்க்க ஆவலுடனிருந்த ரங்காவுக்கு ஏமாற்றம் உண்டாக அவன் ஒரு குச்சியினால் ஓட்டின் மீது குத்திப் பார்த்தான்.

ஆமை அசையவேயில்லை. அதற்குள் தொலைவிலிருந்த அவன் செய்வதைக் கவனித்த மாமா அவனருகே வந்து டேய் என்ன காரியம் செய்கிறாய்? ஆமையைப் பார்க்கவேண்டும் என்பதால் அதைக்குச்சியினால் அடித்துத் துன்புறுத்தலாமா? நீ செய்வது தவறு என்று சொல்லி ஆமையை அப்படியே அணைத்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

பின்பு அதை கதகதப்பான இடத்தில் சற்றுநேரம் வைக்க ஆமை மெதுவாகத் தலையை நீட்டியது. ஆகா! ஆமை எட்டிப் பார்க்கிறது! என்று மகிழ்ச்சியுடன் ரங்கா [illegible]



அம்புலிமாமா கதைகள்

அதற்கு மாமா! ரங்கா ஒரு விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்! மனிதர்களுக்கு மட்டும்தான் அன்பு, பாசம் என்று நினைக்காதே! உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் நம்மைப் போலவே உணர்ச்சிகள் உண்டு.

நீ அவற்றைத் துன்புறுத்தாமல் அன்பு செலுத்தினால் அவையும் நம்முடன் பிரியத்துடன் பழகும் என்று அவர் கூறும்போதே ஆமை மெதுவாக நகரத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

௧௧

**இராஜசிங்கனின் இறுதிக்காலம்**

ஒப்பந்தத்தின்படி ஒல்லாந்தர் நடக்கத் தவறியதால் இராஜசிங்கன் கோபமும் மனக்குழப்பமும் அடைந்தான். அவனது அரசியல் இராஜதந்திரம் தோல்வி கண்டது. உண்ணாட்டில் மக்களிடையே செல்வாக்கு குறைந்ததோடு, கலவர நிலைமைகள் தோன்றின. மிளகைக் கொடுத்து மிளகாயை வாங்கிக்கொண்டான் என மக்கள் பேசத் தொடங்கினர். துரோகிகளுக்கு அவனளித்த தண்டனைகள் கொடூரமாக இருந்தன. அவனை நஞ்சூட்டிக் கொல்லவும் பல முயற்சிகள் நடந்தன. அதனால் தலைநகரை விட்டு வெளியேறி ஹங்குரான்கொடையில் வசிக்கலானான். போர்த்துக்கேயருக்குரியமையான கோட்டைகளைக் கைப்பற்றியதால் ஒல்லாந்தருக்குச் செலுத்தவேண்டிய கடனைக் கட்ட முடியாமல் கடைசிவரை இருந்தான். ஒல்லாந்தரும் அரசனைத தமது கட்டுப்பாட்டுள் வைத்திருப்பதற்காக அக்கடனைச் செலுத்தும்படி இராஜசிங்கனை வற்புறுத்தவில்லை.



2ஆம் இராஜசிங்கன்

உண்ணாட்டில் இராஜசிங்கனுக்கு எதிராக ஏற்பட்ட புரட்சிக்கு அம்பன்வெல ராலா என்பவன் தலைமை தாங்கினான். அவனும் அவனோடு இணைந்த சில திசாவைகளும் மன்னனின் மாளிகைக்குள் நுழைந்து காவலாளிகளைக் கொன்றுவிட்டு, மன்னனைத் தேடினர். அவன் நம்பிக்கையான ஆட்களுடன் மகாமடநுவர என்றவிடத்துக்குத் தப்பிச் சென்றான். புரட்சியாளர்கள் கண்டிக்குச் சென்று, தாயோடு வாழ்ந்த அரசனின் மகனான சிறுவயது இளவரசனைச் சிம்மாசனத்தில் அமர்த்தினர். அச்சிறுவனுக்கு எதுவும் புரியவில்லை. அச்சிறுவனோடு இராஜசிங்கனின் சகோதரி மன்னனிடம் மடகாநுவரவுக்குத் தப்பிச் சென்றாள். அதேவேளை புரட்சியாளர்களிடையே குழப்பங்கள் தோன்றின. ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். சிலரைக் கொன்றும் விட்டனர். ஒரு திசாவை தானே கண்டியின் மன்னன் என அறைகூவிக் கொண்டு கண்டிக்குள் நுழைந்து பலரை வாளுக்கிரையாக்கினான். இராஜசிங்கன் உடன் திரும்பிவந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதோடு புரட்சிக்குத் தலைவகித்த அம்பன்வெல ராலாவைக் கைப்பற்றி தண்டனை வழங்கினான். மன்னனின் மூத்த சகோதரனான விஜயபாகுவின் மகன் ஒரு தடவை கண்டிக்கு வந்து அரசுரிமை பாராட்டினான். அவனை மன்னன் அகப்படுத்த முயன்றபோது ஒல்லாந்தரிடம் சரண்புகுந்தான். அவன் ஒரு காலத்தில் தமக்கு உதவலாம் எனபதால் அவனுக்கு ஒல்லாந்தர் அடைக்கலம் தந்தனர்.




இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் மீன்பிடிக்கும் முறை

மன்னனுக்கு எதிராகப் புரட்சிகள் ஏற்பட்டன. இராஜசிங்கன் புரட்சியாளர்களைக் கடுமையாகத் தண்டித்தான். எனினும், இராஜசிங்கனின் முக்கிய பிரதானிகள் தம் இஷ்டம் போல மக்களை வருத்தினர். மன்னனின் விருப்பத்துக்கு மாறாகவே நடவடிக்கைகளை எடுத்தனர். அத்தோடு இராஜசிங்கன் நாயக்க வம்சத்தில் வந்த ஒருத்தியை மணந்திருந்தான். அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களும் அரசியல் விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தனர். அதனால் கண்டி இராச்சியத்தில் அமைதியின்மை நிலவியது. இராஜசிங்கனின் இறுதிக் காலத்தில் பலரைச் சந்தேகத்தின் பேரில் கடும் தண்டனைக்குள்ளாக்கினான்.

கண்டி இராச்சியத்தில் நாயக்க வம்சம் அதிக செல்வாக்கையும் பங்கினையும் கொண்டிருந்தது. கண்டி மன்னன் சேனரத் தன்மூத்த இரண்டு புதல்வர்களுக்கும் தென்னிந்திய மதுரை நாயக்கர் வம்சத்தில் பெண் எடுத்திருந்தான். நாயக்க வம்சத்தைச்சேர்ந்த இரண்டு இளவரசிகள் அவர்களின் மனைவிகளாக அமைந்தனர். இரண்டாம் இராஜசிங்கனும் நாயக்க இளவரசியையே மணந்திருந்தான். அவன் பின்னர் அவனுடைய மகன் இரண்டாம் விமலதர்மசூரியன், அவனது மகன் விரபராக்கிரம நரேந்திர சிங்கன் ஆகியோரும் நாயக்க குலப்பெண்களையே மணம் முடித்திருந்தனர். இவ்வாறு கண்டி அரசு பரம்பரை மணவினைத் தொடர்புகளை நாயக்கர்களுடன் கொண்டிருந்தது. வீரபராக்கிரம நரேந்திரனுக்குப் பிள்ளைகள் இருக்கவில்லை. அதனால் தன் நாயக்க மனைவியின் சகோதரனான ஸ்ரீ விஜயராஜசிங்கனைத் தனக்குப் பின் பட்டத்துக்குரியவனாக நியமித்தான். அவன் பின்னர் நாயக்க அரச பரம்பரை ஒன்று உருவாகியது. தென்னிந்திய நாயக்க இளவரசிகளுடன் வந்த உறவினர்கள் அரச சபையில் இருந்தனர்.

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

**விமலதர்மசூரியனின் பின்னர்...**



நெகொம்ப ஒல்லாந்தர் கோட்டை

# ஒல்லாந்தர் காலம்

ஐரோப்பிய நாடுகளின் கவனத்தைக் கவர்ந்த வாசனைத் திரவியமாக இலங்கைக் கறுவா விளங்கியது. போர்த்துக்கேயரிலிருந்து ஒல்லாந்தர் உட்பட ஆங்கிலேயர், பிரான்சியர் முதலானோர் இக்கறுவா வர்த்தகத்தில் பங்குகொள்ள விழைந்தனர். எனினும் ஒல்லாந்தர் வேறு ஐரோப்பியர் இலங்கையில் நிலைக்காது கண்காணித்துக் கொண்டனர். ஹிங்குரான்கோட்டை மாளிகையில் 1687 இல் இராஜசிங்கன் மரணமடைந்தான். அவனது மரணச்சடங்குகள் பெரிதாகக் கொண்டாடப்பட்டது. அவனது மரணச்சடங்கைக் கொழும்பில் ஒல்லாந்தர் பெரிதாக நடத்தினர். அவனுக்குப் பின்னர் இராஜசிங்கனின் மகன் விமலதர்மசூரியன் என்ற நாமத்தோடு முடி புனைந்து கொண்டான். அவனுக்குப் பிரதானிகளினதும் பிக்குகளினதும் ஆதரவு இருந்தது. இரண்டாம் விமலதர்மசூரியனின் முடிசூட்டு வைபவம் கொழும்பிலும் கொண்டாடப்பட்டது. இவன் பெரிதும் சமாதானத்தையும் நாட்டில் அமைதியையும் விரும்பியதால் ஒல்லாந்தருடன் சுமுக உறவு கொண்டிருந்தான். தலதாமாளிகையைப் புனரமைத்து தந்ததாதுவைப் பாதுகாத்தான்.



விமலதர்மசூரியனால் புனரமைக்கப்பட்ட கண்டி தலதாமாளிகை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இடம்பெற்றது ஓர் இனப்படுகொலையே

## உலகத்தமிழர் மாநாட்டில் தீர்மானம்



(கொழும்பு)

ஈழத்தில் நடந்தது ஓர் இனப்படுகொலையே என்று உலகத் தமிழர்கள் அனைவரும் இணைந்து ஓர் தீர்மானமாக நிறைவேற்றும் பொருட்டு லண்டனில் பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழர் மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது.

தாயகத்தில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் மற்றும் உலகின் பல பாகங்களில் இருந்தும் லண்டன் மாநாட்டிற்கு வருகை தந்த அனைவருக்கும் பிரித்தானிய தமிழர் பேரவை தமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்தான ஓர் மக்கள் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. தாயகத்தில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் மற்றும் உலகின் பல பாகங்களில் இருந்தும் லண்டனுக்கு வருகை தந்த மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட மக்கள் பல கேள்விகளை எழுப்பினார்கள். அதற்கு பிரதிநிதிகள் பதிலளித்தார்கள். பொதுவாக இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் எப்படி இனிவரும் காலங்களில் உலகின் அதிகார மையங்களை சென்றடையும் என்ற தொனியிலேயே கேள்விகள் அமைந்தன.

இந்திய அரசின் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவதே இன்றைய முக்கிய தேவைகளில் ஒன்று என்பதை ஏற்றுக் கொண்ட அனைவரும் இனிவரும் காலங்களில் இம்மாற்றத்தினை ஏற்படுத்த தாம் பாடுபடுவதாக உறுதி பூண்டனர்.

தமிழகத்தில் வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்களை கொண்டுள்ள அரசியல் சக்திகளை ஓர் மேடையில் அமரவைத்து ஈழத்தமிழர் தொடர்பான காத்திரமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியமைக்கு பிரித்தானிய தமிழர் பேரவையை தமிழக பிரதிநிதிகள் பாராட்டினார்கள். (அ-2)

# பிரதம நீதியரசர் சார்பில் சில்வா ஆஜராவார்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை விசாரணை செய்யவென சபாநாயகரால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழு முன்னிலையில் நீலகண்டன் அண்ட், நீலகண்டன் அசோசியேட்ஸ் சட்டத்தரணிகளின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் சில்வா பிரதம நீதியரசர் சார்பாக ஆஜராவார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தெரிவுக்குழு விசாரணைகள் முடிவடைய ஒரு வருட காலமாகலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தெரிவுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் படி ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-2)

# வரவு செலவு திட்டத்தில் ஒரு சதமும் பிரயோசனமில்லை

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு எதுவித அடிப்படை வசதிகளுமின்றி மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வசதிகளை செய்து கொடுக்க இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை. இது அரசின் ஓரவஞ்சனையை அம்பலப்படுத்தியுள்ளதென வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இந்தியாவும் ஏனைய நாடுகளும் வழங்கிய கொட்டகைகளில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி அவல வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாததிலிருந்து அரசு தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறை தெளிவாகியுள்ளது.

இதேவேளை 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து இந்த வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்பை தாம் முழுமையான தீர்வாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் பிரச்சினை தீர்வுக்கு இது ஒரு மைல் கல்லாகும்.

அரசு கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி அதில் எட்டப்படும் தீர்வை நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்வைக்க இணங்கியது. ஆனால், இறுதியில் அந்த இணக்கப்பாடு மீறப்பட்டது. இந்த நிலையில் ஜனாதிபதி வரவு செலவுத்திட்ட உரையில் கூட்டமைப்பின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார். நாம் எப்படி ஒத்துழைப்பு வழங்குவது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-2)

# சிறைச்சாலை மோதல் பற்றி விசாரிக்க குழு நியமனம்!

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல்கள் தொடர்பில் விசாரணை நடத்த மூவர் கொண்ட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைக் கைதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக உயிரிழந்த 11 கைதிகளின் சடலங்கள் சிறைச்சாலை வளாகத்தினுள் வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த மோதல்கள் காரணமாக விசேட அதிரடிப் படையினர் 13 பேரும் 4 இராணுவத்தினரும் ஒரு சிறைச்சாலை உத்தியோகத்தரும் ஒரு ஊடகவியலாளரும் காயமடைந்துள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் மொத்தம் 3 ஆயிரத்து 621 சிறைக்கைதிகள் உள்ளனர். வழமைபோல் இவர்களிடம் சோதனை நடத்தப்பட்டபோதே கலவரம் ஏற்பட்டுள்ளது. இச் சோதனையின் போது சிறைக் கைதிகளிடமிருந்து சட்டவிரோத பொருட்கள் மீட்கப்பட்டன. சில கைதிகள் கதவுகளை உடைத்துக் கொண்டு வந்து அதிகாரிகளைத் தாக்கினர்.

சிறைச்சாலை ஆயுதக் கிடங்கை உடைத்த கைதிகள் அங்கிருந்து 82 ஆயுதங்களைக் கைப்பற்றினர். அவற்றை கையளிக்குமாறு படையினர் கோரியபோதும் அதற்கு கைதிகள் மறுப்புத் தெரிவித்தனர்.

எனினும் 11 பேர் ஆயுதங்களை கையளித்தனர். இன்னும் ஐந்து ஆயுதங்களை படையினர் தேடி வருகின்றனர். இக் கலவரம் தொடர்பில் பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ-2)

# ஈழத்திற்காக குரல் கொடுக்க தி.மு.க. பணம் பெறுகின்றது

## சிங்கள ஊடகம் குற்றச்சாட்டு

தமிழீழத்திற்காக குரல் கொடுக்க தமிழகத்தின் திராவிடமுன்னேற்றக்கழக கட்சி மில்லியன் கணக்கான டொலர் பணத்தைப் பெற்றுக் கொள்வதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்கள் தி.மு.க. விற்கு இந்தப் பணத்தை வழங்கி வருகின்றனர்.

மாதாந்தம் சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கப்படுகின்றது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகனும் பொருளாளருமான மு.க.ஸ்டாலினுக்கு இந்தப் பணம் வழங்கப்படுகின்றது.

டெசோ மாநாடு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் டெசோ தீர்மானங்களை சமர்ப்பித்தமை உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளுக்கு இந்தப் பணமே பயன்படுத்திக் கொள்ளப்பட்டது என சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (அ-2)

# பரிதியின் படுகொலைக்கும் அரசுக்கும் தொடர்பில்லை

## பிரான்சிற்கான தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர் பரிதி எனப்படும் நடராஜா மதிதரனின் படுகொலைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என பிரான்சிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையின் பின்னணியில் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக் குற்றச்சாட்டுக்கள் அபத்தமானவை. இச் சம்பவம் தொடர்பில் பிரான்ஸ் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரான்ஸ் அரசாங்கத்தினால் விசாரணை நடத்தப்பட்டு வரும் ஓர் விடயம் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது பொருத்தமற்றது. புலி ஆதரவு தரப்பினரின் உட்கட்சி பூசல்கள் அதிகரித்துள்ளமை வெளிப்படையான விடயமாகும்.

சில பிரிவினைவாத இணையத்தளங்கள் அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் களங்கம் ஏற்படும் வகையில் இந்தக் கொலை தொடர்பான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை பிரான்ஸ் அரசாங்கம் விரைவில் கைது செய்து உரிய தண்டனை விதிக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றார். (அ-2)



யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலைக்கு யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) இனால் மாணவர் பயன்பாட்டிற்கான பாண்ட் வாத்திய கருவிகள் அண்மையில் கல்லூரிச் சமூகத்திடம் அன்பளிப்புச் செய்யப்பட்டதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழ் மக்களுக்கு உதவ மலேசிய எம்.பிக்கள் முடிவு

## கட்டமைப்பு ஒன்றையும் உருவாக்கினர்

(கொழும்பு)

இலங்கையில் போரினால் இடம் பெயர்ந்த தமிழர்களுக்கான உதவிகளை வழங்கும் நோக்கில் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலேசிய நாடாளுமன்றக் கட்டமைப்பு ஒன்றை நிறுவியுள்ளனர்.

மலேசியாவின் செம்பருத்தி சஞ்சிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுறுத்தப்பட்ட போரினை அடுத்து தற்காலிக முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நான்கு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து தங்களது சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் படிப்படியாக மீள குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தமிழர்களுக்காக மலேசிய நாடாளுமன்றக் கூட்டமைப்பு தகுந்த இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அதன் தலைவர் டத்தோ ஜொஷாரி அப்டுல் தெரிவித்தார்.

இலங்கை தமிழருக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் வரை அவர்களுக்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சி குரல் கொடுக்கும் என்று அந்தக் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

லண்டனில் இடம்பெற்று வரும் சர்வதேச தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இலங்கையில் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்டவை குறித்து பாராபட்சமின்றி விசாரிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்க இடமளிக்கபடமாட்டாது என்றும் டி.ராஜா தெரிவித்தார்.

இலங்கையுடன் இந்தியா இணக்கமான உறவை கொண்டுள்ளமை தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதற்கு பங்களிப்பு செலுத்த வேண்டும். அதிகாரத்தில் உரிமையும் கிடைக்க வேண்டும்.

இந்த மாநாட்டில் தமிழருக்கான பிரிட்டன் நாடாளுமன்ற குழுவில் இடம்பெற்றுள்ள அந்த நாட்டு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருந்தனர்.(அ-2)

# போலி நாணயங்கள் பயன்பாட்டிலுள்ளன

## புலனாய்வு பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 50 இலட்சம் ரூபா போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதிலும் சுமார் 50 ரூபா போலி நாணயத்தாள்களை சிலர் புழக்கத்தில் விட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு போலி நாணயத்தாள்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

தென், மத்திய, ஊவா, வடமத்திய போன்ற பகுதிகளில் அதிகளவு போலி நாணயத்தாள்கள் புழங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# வாகனங்களின் விற்பனை 80 வீதத்தால் வீழ்ச்சி!

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக நாட்டில் வாகனங்களின் விற்பனை 80 வீதம் குறைந்திருப்பதாக வாகனங்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் கவலை தெரிவிக்கின்றன.

வாகனங்களின் விற்பனை வீழ்ச்சிக்கு அமெரிக்க டொலரின் விலை உயர்ந்திருப்பதனாலும் வாகனங்களை வாங்குவதற்கு கடன் உதவி வழங்கும் நிதி நிறுவனங்களின் வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டிருப்பதுமே இதற்கான பிரதான காரணம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

வங்கியில் இருந்து கடன் பெற்று இந்த வாகனங்களை இறக்குமதி செய்துள்ள நிறுவனங்கள் வாகனங்கள் விற்பனையாகாத காரணத்தினால் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர்.

பெற்றோலில் இயங்கும் வான்கள் மீதான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி தனது வரவு செலவு திட்ட உரையில் தெரிவித்துள்ளதனால் அவற்றின் விலை குறையாவிட்டாலும் உயர்ந்து விடாது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளையில் முச்சக்கரவண்டிகள் மீது 5 வீத இறக்குமதி தீர்வை விதிக்கப்படும் என்றும் அது இப்போது 40 ஆயிரம் ரூபாவினால் முச்சக்கர வண்டிகளின் விலை அதிகரிப்புக்கு ஏதுவாக அமையும் எனவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஷிராணி மீதான குற்றச்சாட்டுக்களில் இரண்டு போலியானது- ஜே.வி.பி

(கொழும்பு)

குற்றப் பிரேரணையின் இரண்டு குற்றச் சாட்டுகளிலிருந்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையில் 14 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த குற்றச்சாட்டுக்களின் 9 ஆம் மற்றும் 11 ஆம் குற்றச்சாட்டுக்கள் முற்று முழுதான போலிக் குற்றச்சாட்டுக்கள் என்பது புலனாகியுள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க 1996 ஆம் ஆண்டே உச்ச நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்து கொள்கின்றார்.

எனினும் குற்றச்சாட்டு இலக்கம் 9 மற்றும் 11 இல் ஷிராணி பண்டாரநாயக்க 1992 ஆம் ஆண்டில் நீதியரசராக கடமையாற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என ஜே.வி.பி சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.11 12

★1833- அலபாமாவில் லியோனீட் விண்கற்கள் வீழ்ந்தன.

★1893-அன்றைய பிரித்தானிய இந்தியாவுக்கும் (தற்போதைய பாகிஸ்தான்) ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக்கோடு கீறப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.

★1905-நோர்வே மக்கள் வாக்கெடுப்பு மூலம் குடியாட்சியை விட மன்னராட்சியே சிறந்தது எனத் தெரிவித்தனர்.

★1906-பாரிசில் அல்பேர்ட்டோ சாண்டோஸ்- டியூமொண்ட் வானூர்தி ஒன்றைப் பறக்கவிட்டார்.

★1918-ஆஸ்திரியா குடியரசாகியது.

★1927-மகாத்மாகாந்தி இலங்கைக்கான தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை மேற்கொண்டார்.

★1927-லியோன் ட்ரொட்ஸ்கி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். ஜோசப் ஸ்டாலின் சோவியத்தின் முழு அதிகாரத்தையும் கைப்பற்றினார்.

★1938-மடகஸ்காரை யூதர்களின் தாயகமாக மாற்றும் நாசி ஜேர்மனியின் திட்டத்தை ஹேர்மன் கோரிங் என்பவர் வெளிக்கொண்டு வந்தார்.

★1941-இரண்டாம் உலகப் போர்: செவஸ்தபோல் நகரில் சோவியத் போர்க்கப்பல் செர்வோனா உக்ரயீனா மூழ்கடிக்கப்பட்டது.

★1944-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் அவ்ரோ போர் விமானம் ஜேர்மனியின் போர்க்கப்பல் ஒன்றை நோர்வேயில் மூழ்கடித்தது.

★1948- டோக்கியோவில் பன்னாட்டு போர்க் குற்றவாளிகளின் நீதிமன்றம் ஒன்று ஏழு ஜப்பானிய இராணுவ அதிகாரிகளுக்கும் 2 ஆம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக மரண தண்டனை விதித்தது.

★1969- மைலாய் படுகொலைகள் தொடர்பான உண்மைகளை ஊடகவியலாளர் சீமோர் ஹேர்ஷ் வெளியிட்டார்.

★1980-நாசாவின் விண்கப்பல் வொயேஜர் 1 சனிக்கோளுக்கு மிக அருகில் சென்று அதன் வளையங்களின் படங்களை பூமிக்கு அனுப்பியது.

★1981-கொலம்பியா விண்ணோடம் தனது இரண்டாவது விண்வெளிப் பயணத்தை இரண்டு வீரர்களுடன் ஆரம்பித்தது.

★1982-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக யூரி அந்திரோப்பொவ் தெரிவு செய்யப்பட்டார்.

★1989-தென்னிலங்கையின் உலப்பனையில் தனது தோட்ட வீட்டில் மறைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜேவீர கைதாகி மறுநாள் கொல்லப்பட்டார்.

★1990-இணையவலை பற்றிய தனது முதலாவது திட்டத்தை ரிம் பேர்னேர்ஸ்- லீ அறிவித்தார்.

★1991-கிழக்குத் திமோர் டிலியில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் இந்தோனேசிய இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயிரிழந்தனர்.

★1994-இலங்கையின் 5 ஆவது அரசுத் தலைவராக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டார்.

★1998- கியோட்டோ பிரகடனத்தில் ஆல் கோர் கையெழுத்திட்டார்.

★2001-ஆப்கானிஸ்தானின் காபூல் நகரை விட்டு தலிபான் படைகள் முற்றாக விலகினர்.

★2006-முன்னாள் சோவியத் குடியரசான தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து பிரிந்து செல்ல வாக்கெடுப்பை நடத்தியது.

### பிறப்புக்கள்

★1866-சுன் இசியன், சீனாவின் புரட்சித் தலைவர் (இ.1925)

★1896-சலீம் அலி, இந்திய பறவையியல் வல்லுநர் (இ.1987)

★1920-வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (இ.2006)

### இறப்பு

★2001-சத்குரு சிவாய சுப்ரமணிய சுவாமி, இந்து அமெரிக்க ஆன்மீகவாதி (பி. 1927)



**சிவாய சுப்ரமணியசுவாமி**

சத்குரு சிவாய சுப்ரமணியசுவாமி ஆங்கிலேயராகப் பிறந்த இந்துசமய அமெரிக்க ஆன்மீகவாதி ஆவார். இவரது இயற்பெயர் ரொபேர்ட் ஹான்சன்.

இவர் குருதேவா என இவரது பக்தர்களால் அழைக்கப்பட்டவர். யாழ்ப்பாணம் சிவயோக சுவாமியின் சீடர் ஆவார். 1970 களில் ஹவாயில் கௌவாஹி தீவில் சைவ சித்தாந்த ஆதீனம் என்ற பெயரில் ஒரு கோயிலை ஆரம்பித்து இந்து சமயம் இன்று என்ற ஆங்கில மாதிகையை வெளியிட ஆரம்பித்தார். இந்து சமயம் தொடர்பாகப் பல ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலேயராகப் பிறந்து இந்துவாக வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை மீறி, இந்தியாவால் எதையும் சாதித்துவிட முடியாது

இலங்கையில் தமிழர்கள் சுயமரியாதையுடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு உதவ வேண்டும் என்கிற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா பின்வாங்காது என்று பாரதப் பிரதமர் மன்மோகன் சிங், சமீபத்தில் தன்னை சந்தித்த இலங்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார். இலங்கைப் பிரச்சினையில் தொடக்கத் திலிருந்தே தமிழ் மக்களின் நலன் காக்கப்படும் என்பது போன்ற பாசாங்கு வார்த்தைகளை கூறி பொய்யான வாக்குறுதிகளை கொடுப்பதை இந்திய அரசு தொடர்ந்து செய்து வந்திருக்கிறது. சமீபத்திய பிரதமரின் பேச்சும் இந்த ரகம்தான் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இனத் தீர்வுக்கான பிரச்சினையில் பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல் என்கிற இரட்டை நிலையைத் தான் இந்திய அரசு மேற்கொண்டு வந்திருக்கிறது. தமிழர் நலம், தமிழர் பாதுகாப்பு என்று இந்திய அரசு பேசும் பேச்சுக்களெல்லாம் இந்திய நலன் சார்ந்தவைகள் தானே தவிர தமிழ் மக்களுக்கு இதன்மூலம் விடிவு ஏற்படும் என்கிற நோக்கத்தில் அமைந்தவை அல்ல. ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படும் உடன்பாடுகள், வாக்குறுதிகள் என இனப்பிரச்சினையில் எதையுமே சிங்கள அரசு பின்பற்றியதில்லை; காப்பாற்றியதில்லை. 1987 இல் உருவான இலங்கை- இந்தியா அமைதி ஒப்பந்தம் தமிழர்களின் இனப்பிரச்சினையை மையப்படுத்தி உருவாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்தைக்கூட அது பின்பற்றியதில்லை.

இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா, பிரிட்டன், இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் உளவுப் பிரிவு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் இலங்கையில் முகாமிட்டு இருப்பதை தடுக்க வேண்டும். வெளியுறவு மற்றும் இராணுவ விவகாரங்களில் மேற்கண்ட நாடுகளுடனான ஈடுபாட்டை இலங்கை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இலங்கையின் கப்பல் துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றை வெளிநாடுகள் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கும் வகையில் இலங்கை நடந்து கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். வொய்ஸ் ஆஃப் அமெரிக்க உள்ளிட்ட சர்வதேச ஊடகங்கள் இராணுவ காரணங்களுக்காக இலங்கையிலிருந்து பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்றெல்லாம் ஷரத்துகள் சேர்க்கப்பட்டு அப்போதைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கான உத்திரவாதங்களை ஜெயவர்த்தனவிடமிருந்து பெற்றுக் கொண்டுதான் தமிழர்களுக்கான அமைதி ஒப்பந்தத்தை உருவாக்கினான் ராஜீவ் காந்தி. இந்த ஒப்பந்தம் தான் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியாக நம்புகிறார். இலங்கை அதிபர் ராஜபக்சவும் இந்த ஒப்பந்தப்படி தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கத் தயார் என்று முன்பு அறிவித்திருந்தார். இந்த அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவானதுதான் இலங்கை அரசு கொண்டு வந்துள்ள 13-வது அரசியல் திருத்தச் சட்டம்.

இலங்கை ஒற்றையாட்சி முறையைக் கொண்டிருந்தாலும் இந்த 13-வது அரசியல் சட்ட திருத்தம் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வுக்கு ஓரளவு வழிசெய்கிறது. கூட்டாட்சி என்ற இந்தியாவின் ஆட்சி முறையை ஏறக்குறைய பிரதிபலிப்பதாகவே இந்த 13-வது சட்டத் திருத்த ஷரத்துகள் இருக்கின்றன. 13-வது சட்டதிருத்தத்தின் முக்கிய நோக்கமே தமிழர்களுக்கென்று தனி மாகாணம் அமைப்பதே! தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒரே மாநிலமாகக் கருதவேண்டும் என்ற தமிழர் தரப்பின் கோரிக்கை 13-வது சட்டத் திருத்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேசமயம் கிழக்கில் பெரும்பான்மையாக முஸ்லிம் சமூகம் வாழந்து வருவதால் அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை கருத்தில் கொண்டு வட-கிழக்கில் இணைந்து ஒரே மாநிலமாகக் ஒரு வருடகாலம் செயற்படும் என்றும், தொடர்ந்து வட- கிழக்கு ஒரே மாநிலமாக இருக்க வேண்டுமா அல்லது தனித்தனி மாகாணங்களாக செயற்பட வேண்டுமா என்பதை மக்கள் வாக்கெடுப்புமூலம் முடிவு செய்து கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. தமிழர்களுக்கான இந்த மாகாணத்தில் ஒரு கவர்னர் இருப்பார். அவரை இலங்கை அதிபர் 5 வருட காலத்திற்கு நியமனம் செய்வார். மாகாண முதல்வரின் ஆலோசனைப்படி கவர்னர் செயற்படுவார். ஆனால், கவர்னருக்கான அதிகாரம் இந்திய கவர்னருக்கு இருப்பதைப் போன்ற அதிகாரம் கொண்டதாக வரையறுக்கப்பட்டது. மாகாணத்தின் ஆயுட்காலம் 5 வருடங்கள்தான். ஒரு முதல்வர், 4 பேருக்கு மிகாமல் அமைச்சர்கள் இருப்பார்கள். மாகாணங்களில் செயற்படும் கட்சிகளில் எந்தக் கட்சி 50 சதவிகித எம்.எல்.ஏக்களைக் கொண்டதாக உள்ளதோ அக்கட்சியின் தலைவரை முதல்வராக கவர்னர் நியமிக்க வேண்டும்.

தமிழர் மாகாண அதிகாரத்தைப் பொறுத்தவரை, இந்தியாவில் மத்திய அரசு இயற்றும் சட்டங்களுக்கு சென்ட்ரல் லிஸ்ட் என்றும் மாநில அரசு இயற்றும் சட்டங்களுக்கு ஸ்டேட் லிஸ்ட் என்று மத்திய மாநில அரசுகள் இணைந்து இயற்றும் சட்டங்களுக்கு கன்கரண்ட் லிஸ்ட் (ஒரே நேரத்தில் இணைந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் அமைந்தவை) என்றும் இருப்பதைப்போலவே இலங்கையிலும் சட்டதிருத்தத்தில் இவையே ஏற்றுக்கொள்ளப்பட்டன.



இலங்கை அரசின் மத்திய லிஸ்டின்படி இராணுவம் தேசிய பாதுகாப்பு, வெளியுறவு, தகவல் ஒளிபரப்பு போன்றவை மத்திய அரசிடம் இருக்கும். கல்வி, உள்ளாட்சி, வீட்டு வசதி, சாலைவசதி, சுகாதாரம், கூட்டுறவு, சமூக சேவை, நீர்ப்பாசனம், வளர்ச்சித் திட்டங்கள் குறித்த திட்டமிடல்கள், சட்டம் ஒழுங்கை செயற்படுத்தும் பொலிஸ் அதிகாரம் உள்ளிட்டவை மாகாண சபைக்கு வழங்கப்பட்டது. ஆட்சிக் கலைப்பு விடயத்தைப் பொறுத்தவரை, இந்தியாவில் இருக்கும் 356-வது அரசியல் சட்டப்பிரிவைப்போல், இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டாலோ, மாகாண அரசு அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கவில்லை என்று அதிபர் கருதினாலோ ஆட்சியைக் கலைக்கலாம்.

நீதித்துறையைப் பொறுத்தவரை, மாகாணங்களுக்கு தனியாக உயர் நீதிமன்றம் இருக்கும். நீதிபதிகளை இலங்கை தலைமை நீதிபதி நியமிப்பார். இந்தியாவில் மாநில அரசுகளுக்கு தலைமைச் செயலாளர் இருப்பதைப் போன்று இலங்கை மாகாணத்திலும் தலைமைச் செயலாளர் இருப்பார். இந்தியாவில் மாநில அரசு தலைமைச் செயலாளர்களை நியமித்துக் கொள்ள முடியும். ஆனால், இலங்கையில் மாகாணத்திற்கு தலைமைச் செயலாளரை, சம்பந்தப்பட்ட மாகாண முதல்வரின் ஒப்புதலுடன் அதிபரே நியமிப்பார். மேலும், தமிழ் ஆட்சி மொழியாக ஏற்கப்படும். மேற்கண்ட இவை 13-வது சட்டத் திருத்தத்தில் இணைக்கப்பட்ட முக்கிய ஷரத்துக்களின் சுருக்கம்தான். இப்படி இன்னும் தமிழர்களுக்கு சில அதிகாரங்களை வழங்கும் ஷரத்துகள் உள்ளன. இவற்றைப் பார்க்கும்போது ஒரு விடயம் பளிச்சென புரிந்து விடும். இந்த 13-வது சட்டத்திருத்தங்களை வரைவு செய்து இலங்கை அரசிடம் இந்தியாதான் கொடுத்திருக்கிறது என்பதுதான் அது! அல்லது இந்தியாவில் இயங்கும் இலங்கை தூதரகம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை அப்படியே ஜெராக்ஸ் எடுத்து இலங்கையிடம் கொடுத்திருக்கிறது என்றும் நம்பலாம். இந்த சட்டத்திருத்தம்- விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போதே நிறுவப்பட்டு, இதிலுள்ள நிறைகுறைகள் திறந்த மனதோடு இருதரப்பிலும் பேசப்பட்டு சட்டத் திருத்தம் முழுமைபெற்றிருந்தால் தமிழர்களுக்கு இந்நேரம் அதிகாரப் பகிர்வு கிடைத்திருக்கும். ஆனால், இலங்கை அரசு இந்தச் சட்டதிருத்தத்தை நிறைவேற்றுவதில் முனைப்பு காட்டவில்லை. இதற்கு காரணம், விடுதலைப்புலிகளை முற்றாக அழித்துவிட்டுத்தான், இதனை அமுல்படுத்துவேன் என்ற கொள்கையில் அதிபர் இருந்ததுதான் என்கின்றனர், இனத் தீர்வு பிரச்சினையை அவதானித்து வரும் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள்.

13-வது சட்ட திருத்தத்தை அமுல்படுத்தி விடுதலைப்புலிகளை ஜனநாயகப் பாதைக்கு திசை திருப்பும் நல்ல வாய்ப்பு இருந்தும், பெரும்பான்மைப் பேரினவாதத்தின் காரணமாக அந்த வாய்ப்பை நழுவவிட்டது இலங்கை அரசு என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இலங்கை அரசு இதுவரை 13-வது சட்டத்திருத்தத்தை அமுல்படுத்தாமல் இருப்பது அதன் மீதான நம்பிக்கையின்மையை இன்றுவரை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கி வைத்திருக்கிறது. இதனை சமீபத்தில் இந்தியாவிற்கு வந்து பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கு முன் இலங்கை ஊடகங்களுக்கு பேட்டியளித்த தமிழத்தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் பேச்சும் மெய்ப்பிப்பதாக உள்ளது. 13-வது சட்டதிருத்தத்தை நிறைவேற்ற தயார் என்று அரசு கூறவில்லை. 13-வது சட்டத் திருத்தத்தை பொறுத்தவரை, நியாயமான, ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தி அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்தால், அதை ஏற்றுக் கொள்ளலாம்... என்று தெரிவித்துள்ளார்.

**நன்றி: இணையம்**

இதற்கிடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை பாராளுமன்ற தேர்வுக் குழுவை ஏற்படுத்தியிருக்கும் இலங்கை ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இணைய வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்படுகிறார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ARRUL GLOBAL EXPRESS

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப வெவ்வேறுபட்ட கட்டணங்களில் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்

கடலுணவு, மருந்துப்பொருட்கள், எண்ணெய்வகைகள் என்பவற்றை அனுப்பும் வசதி.

மதிப்புக்குரிய எமது உறவுகளுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம். 021 222 6113

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



Midea Electro Mart

No. 1-1, 1-H, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4566, Fax: 021 222 1646
E-mail: midea21@gmail.com,
www.midemart.com
Authorized Dealer for Abans Ltd.

Midea PC Show Room

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்




தீபாவளியை முன்னிட்டு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான புத்தம் புதிய நவீனரக ஆடை வகைகள் ஒரே கூரையின் கீழ் பிரமாண்டமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

## ஸ்ரைல் பார்க்

171, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பாரம்பரிய பட்டுக்களின் பரந்தசோலை

## காவேரி சில்க்ஸ்

திருமணப் பட்டுப்புடைவைகளிற்கு கைராசியான ஸ்தாபனம்

தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஒரே இடம்

காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2333




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத்திட்டம் 2013

## ஒரே பார்வையில்

02

எனவே, பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி என்பவற்றுக்காக பொலிஸ் கல்லூரியினை அபிவிருத்தி செய்யவும் பொலிஸ் நிலையங்களின் புனரமைப்பு மற்றும் நிர்மாணத்திற்காக பொலிஸ் துறைக்கு 2013 இல் மேலும் ரூபா 950 மில்லியனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அவர்களது கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

3.3 கௌரவ சபாநாயகர் அவர்களே, சிவில் பாதுகாப்பு படையினர் யுத்த காலத்தின் போது எமது கிராமங்களுக்கு மிகவும் பெறுமதியான சேவைகளை வழங்கியுள்ளனர். இதனைப் பாராட்டுமுகமாக இப்படையிலுள்ள அனைத்து சேவையாளர்களும் ஓய்வூதியம் பெறும் அந்தஸ்து வழங்கப்படுவர். சிவில் பாதுகாப்பு படையினர் வனஜீவராசிகளின் அச்சுறுத்தல் காணப்படும் அனைத்து கிராமங்களிலும் மின்சார வேலிகளை பாதுகாத்தல் மற்றும் பிற பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஈடுபாடு காட்டமுடியும்.

4.2011-2015 இரண்டாவது ஐந்து வருட திட்ட வேலைச்சட்டகம்

4.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, மஹிந்த சிந்தனை எதிர்கால தூரநோக்கு திட்டத்தில் வெளியிடப்பட்ட அணுகுமுறைகளின் படி மேற்குறிப்பிட்ட செயலாற்றுகையின் அடிப்படையில் 2011 இலிருந்து 2015 காலப் பகுதிக்கான இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நாம் நுழைந்துள்ளோம். எமது இலக்கு இந்நாட்டினை 2016 இல் தலா வருமானம் 4000 ஐ.அ.டொலர்களை பெறுவதன் மூலம் உயர்நடுத்தர வருமானம் பெறும் நாடொன்றாக மாற்றுவதாகும் எமது மொத்த வளர்ச்சி உபாயமானது. எமது முழு மொத்த வளர்ச்சி உபாயமானது, மொ.உ. உற்பத்தியில் 35 சதவீதத்தினை மேலதிகமாகக் கொண்ட மூலதன மட்டத்தில் படிப்படியான அதிகரிப்பினை அடிப்படையாக கொண்டுள்ளது. குறிப்பாக மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் சந்தை அடைவினை வெளிநாடுகளிலிருந்து திரட்ட வேண்டிய துறைகளில் உள்நாட்டு தனியார் முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4.2 கௌரவ சபாநாயகர் அவர்களே, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டமைப்பில் கட்டமைப்பு ரீதியில் போதிய ஆற்றல் கொண்டிராத சமமற்ற நிலைமைகளை மாற்றியமைப்பது உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை உருவாக்குவதற்கான முக்கிய விடயமாகும். அரசாங்க முன்னுரிமைகளின் பிரதிபலிக்கின்ற வளர்ந்துவரும் முதலீட்டு விடயங்களில் நான் ஊக்கம்பெற்றுள்ளேன். உணவு மற்றும் விவசாயம், சுற்றுலா, பார கைத்தொழில், பெருந் தோட்டங்கள், தேயிலை, ஆடை, தகவல் தொழில்நுட்பம், வாசனை திரவியங்கள், மருந்துப்பொருட்கள், சக்தி, பெற்றோலிய மூலப்பொருட்கள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றில் படிப்படியான முதலீட்டு அதிகரிப்பு, முதலீட்டு இலக்குகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களின் வளர்ச்சியினையும் ஏற்படுத்தியுள்ளது.

4.3 கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த நிலைமாறல் செயன்முறையில் நாம் சவால்களை புறக்கணிக்காதிருத்தல் வேண்டும். சர்வதேச பொருளாதாரம் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார எழுச்சி மிகவும் தாமதமாக இடம்பெற்று வருகின்றது. ஐரோப்பிய வலய நெருக்கடியானது பிரதான ஐரோப்பிய பொருளாதாரங்களை ஆழமான பொருளாதார நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளதுடன் ஐரோப்பிய பொருளாதாரங்களில் ஸ்திரத்தன்மையற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு பொருளாதாரங்கள் அரசியல் நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொண்டுள்ளன. சீனாவின் பொருளாதார வளர்ச்சியானது ஏறக்குறைய 7.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக வளர்ச்சி யடையுமென எதிர்பார்க்கட்பட்டுள்ளது. இந்த பொருளாதாரங்கள் அனைத்தும் ஈரானில் இருந்து மசகு எண்ணெய்யினை பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன. அதேபோன்று எண்ணெய் விலைகள் உயர் வாக இருப்பதனால் வரையறுக்கப்பட்ட எமது வெளிநாட்டு ஒதுக்குகள் தொடர்ந்தும் பெருமளவில் வெளிச்செல்கின்றன. கடன் விரிவாக்கம், பொது தொழில்முயற்சி முகாமைத்துவம், சக்தி மற்றும் பெற்றோலிய விலைகள் என்பன தொடர்பான உள்நாட்டுக் கொள்கைகளும் எமது பொருளாதார செயலாற்றுகையில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.



4.4 எனது கடந்த வரவு செலவுத்திட்டத்தில், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபாரத்தில் காணப்படும் சமமற்ற நிலமையினை திருத்துவதற்கான பொறுப்புடைய செயற்பாடுகளின் அவசியத்தை இச்சபையில் நான் விளக்கியிருந்தேன். உயர்ந்த எண்ணெய் விலைகளுக்கு மானியம் வழங்குவதற்கான வரையறை காணப்படுகின்றது. எண்ணெய்யினை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி உபாயங்களில் தங்கியிருப்பது ஆபத்தானதாகும். இச்சவால்களை எதிர்கொள்வதற்கான சரியான செயற்பாடுகள் அரசியல் ரீதியில் கடினமானதாயினும் பொறுப்புடைய அரசாங்கமொன்று என்ற வகையில் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்தி நலனை கவனத்திற்கொண்டு நாம் அதனை செய்ய வேண்டியுள்ளது.

4.5 நாணயமாற்று வீதத்தில் பெருமளவிலான நெகிழ்வுத் தன்மையினையும் இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு கடன் விரிவாக்கலில் குறைந்தளவிலான நெகிழ்வுப் போக்கினையும் நாம் அனுமதித்துள்ளோம். மோட்டார் வாகனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மீதான உற்பத்தி வரியில் அதிகரிப்பு. வெளிநாட்டு நாணய முகாமைத்துவ ஒத்துழைப்புக்கு அவசியமானதாகும்.

இறக்குமதிகளைக் குறைப்பதற்காக அரிசி, சோளம், வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் பாற்பொருட்களில் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் விசேட நுகர்வுப்பொருள் அறவீட்டினை எம்மால் விதிக்க முடியுமாக இருந்தது. இச்செயன்முறைகள் இறக்குமதிகளிலிருந்து வரி வருமானத்தினை குறைத்த போதிலும் வருமானத்தில் அத்தகைய போக்கினை ஒரு சீராக வைத்துக் கொள்வதில் அரசாங்க செலவீனத்தினை பாதுகாக்கும் எமது செலவீன நிகழ்ச்சித்திட்டங்களை நாம் குறைக்கச் செய்துள்ளோம்.



4.6 கௌரவ சபாநாயகர் அவர்களே, முன்னைய அரசாங்கங்களைப் போன்று குறைவருமானம் பெறும் மக்களின் உதவு தொகைகளை நாம் நீக்கவில்லை. கிராமிய அபிவிருத்திகளும் அவர்களது வாழ்வாதார மேம்பாடுகளும் மட்டுப்படுத்தப்படவில்லை. கல்வி மற்றும் சுகாதாரம் மீதான செலவீனம் அத்துடன் அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவைகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் முடக்கப்படவில்லை. தற்பொழுது இடம்பெற்று வரும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மீதான அபிவிருத்திச் செலவீனம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப்படவில்லை. அரசாங்க தொழில் முயற்சிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது என்பதை நாம் அழுத்தமாகக் கூறவேண்டும். அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் தாங்கிக் கொள்ள முடியுமான வரையறைகளுக்குள் நிலைத்திருக்கின்ற வகையில் நியாயமான தீர்வுகளை இனங்காண்பதற்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் நாம் தயாராக இருக்கின்றோம்.

4.7. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பொதுவான கொள்கை நடவடிக்கைகள் சாதகமான பங்களிப்புக்களை செய்துள்ளன. சர்வதேச சந்தைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக ஏற்றுமதியாளர் படிப்படையாக அழிவடைந்துள்ள போதும் அவர்கள் அனைவரும் நாணயச் செலாவணி முகாமைத்துவத்தில் மேற்கொண்ட நெகிழ்ச்சிப் போக்கின் மூலம் நன்மையடைந்துள்ளனர். ஏற்றுமதிச் சந்தைகளில் வீழ்ச்சியடைந்ததற்கு மாற்றமாக ஏற்றுமதி வருமானங்கள் முன்னைய வருடத்தில் காணப் பட்ட 10.1 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக காணப்பட்டன. இறக்குமதிகள் மீதான செலவீனம் கடந்த வருடம் காணப்பட்ட 20 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 18.5 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் களாக குறைக்கப்பட்டுள்ளன. உள் நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் உணவு மற்றும் பாற்பொருள் உற்பத்திகளின் இறக்கு மதியினை இல்லாதாக்குவதற்கு சீராக்கற் செயற்முறைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலை வாய்ப்பிலிருந்து பெறப்படுகின்ற உறுதியான வருமான உட்பாய்ச்சல், அதிகரித்த சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் அரசாங்கத்தினதும் அதேபோன்று தனி யார் துறையினரினதும் மூலதன உட் பாய்ச்சல் எமது வெளிநாட்டுக் கணக்குகளை உறுதிப்படுத்துவதற்கு உதவியாக இருந்துள்ளன. இதன் விளைவாக அரசாங்கம் வெளிநாட்டு ஒதுக்குகளை ஏறக்குறைய 7 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக பேணுவதற்கும் நாணயச் செலாவணி சந்தையினை உறுதிப் படுத்துவதற்கும் முடியுமாக இருந்தது.

4.8 நிச்சயமற்ற சர்வதேச பொருளாதார சூழலுக்கு மத்தியில், ஏறக்குறைய 6.8 சதவீத திருப்திகரமான பொருளாதார வளர்ச்சியொன்றினை பேணுவதற்கு எம்மால் முடியுமாக இருந்தது. சிறுபோக அறுவடை மற்றும் நீர்மின் உற்பத்தியில் பின்னடைவு காணப்பட்ட போதிலும் ஏற்றுமதி பொருளாதாரம், நிர்மாணக் கைத்தொழில் மற்றும் சேவைத்துறை செயற்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சி இதற்கு காரணமாகும். வரிவிதிக்கத்தக்க இறக்குமதிகளில் வீழ்ச்சி காரணமாக அரசாங்க வருமானத்தில் மோசமான பாதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் வரிகள் அதேபோன்று அரசாங்க செலவீனங்களில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களின் மூலம் 2012 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 6.2 சதவீதமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை பேண முடியுமாக இருந்தது. பணவீக்க அச்சுறுத்தலானது எமது நிதிக் கொள்கைகள் , உள்நாட்டு உணவு உற்பத்தியில் அதிகரிப்பு, உறுதியான வெற் களஞ்சியமொன்றினை பேணியமை மற்றும் ஒத்திசைவான அரசாங்க சம்ப ளக் கொள்கை என்பவற்றின் மூலம் இல்லாது போனது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் என்.சில்வாவுக்கு சவால் விடுக்கக்கூடியவர் ஷிராணி

## விக்கிலீக்ஸ் தகவல்

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவிற்கு சவால் விடுக்கக்கூடிய ஆற்றல் தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விற்கு மட்டுமே காணப்படுகிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் சிப்லி அஸிஸ் மற்றும் முன்னணி சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஆகியோருக்கும் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு விவகார அதிகாரி ஜேம்ஸ் ஆர்.மூரினால் கடந்த 2007 ஆம்ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சரத் என்.சில்வாவை போன்ற நாட்டின் அனைத்து நீதவான்கள் மீதும் மிகுந்த ஆதிக்கம் கொண்ட வேறு பிரதம நீதியரசரை தாம் காணவில்லை என முன்னாள் சட்டமா அதிபர் சிப்லி அஸீஸ் தெரிவித்துள்ளார்.

சட்டம் தொடர்பில் மிகச் சிறந்த பாண்டித்தியம் கொண்ட பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மிகவும் தந்திரமிக்கவர் என சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். பழிவாங்கும் எண்ணத்துடன் சரத் என்.சில்வா செயற்பட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உச்ச நீதிமன்றில் 11 நீதியரசர்கள் அங்கம் வகித்த போதிலும் யாரை வழக்குகளுக்கு நியமிப்பது, எவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவே தீர்மானிப்பார் என குறிப்பிட்டுள்ளார்.

சரத் என்.சில்வாவின் நடவடிக்கைகளுக்கு சவால் விடுக்கும் தைரியம் உள்ள ஒரே நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மட்டுமே என அவர் தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணை அமர்வுகளில் அங்கம் வகிக்காத போதிலும் தீர்ப்புக்களில் சரத் என்.சில்வா தாக்கம் செலுத்துவார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தமக்கு தேவையானதை பெற்றுக் கொள்வதற்காக சன்மானங்களையும் தண்டனைகளையும் சரத் என்.சில்வா பயன்படுத்திக் கொண்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

## குளவி கொட்டியதால் நால்வருக்கு ஆபத்து

பாடசாலை வளவொன்றில் இருந்த குளவிக்கூடு கலைந்து மாணவர்களை கொட்டியதில் நான்கு மாணவர்கள் ஆபத்தான நிலையில் மீகாகியுல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீகாகியுல பகுதியின் மொரகல கனிஷ்ட வித்தியாலயத்தின் வளாகத்திலேயே கடந்த 9 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவனொருவனால் குளவிக் கூட்டிற்கு எறியப்பட்ட கல்லையடுத்து குளவிக்கூடு கலைந்ததாக ஆரம்ப விசாரணையின் போது தெரியவந்துள்ளது. கந்தகெட்டிய பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

## சரத் பொன்சேகாவின் கட்சி இன்னமும் பதியப்படவில்லை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கட்சி இன்னமும் பதிவு செய்யப்படவில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தமது கட்சியை அங்கீகரிக்குமாறு சரத் பொன்சேகா ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்ற காலத்தில் கட்சிப் பதிவு தொடர்பான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் கட்சியை பதிவு செய்ய முடியவில்லை.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியொன்றின் முக்கிய பொறுப்பை வகிப்போர் பதவி விலகினால் அது குறித்து தேர்தல் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டியது அவசியமானதாகும்.

எனினும் சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு கட்சி இன்னமும் பதிவு செய்யப்படவில்லை. எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் பதவி விலகியமை தொடர்பில் தேர்தல் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றார். (அ-2)

## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசாமி சின்னப்பிள்ளை



புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தை (ஊரதீவு) பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சின்னப்பிள்ளை நேற்று 11.11.2012 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- சிவக்கொழுந்து தம்பதியர்களின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி (யாழ்ப்பாண வர்த்தகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவலிங்கம் (வர்த்தகர் வெள்ளவத்தை, கொழும்பு) S.K. சண்முகலிங்கம் J.P. (அதிபர், யா/ புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் - தவிசாளர், வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை), பங்கயற் செல்வி (ஓய்வு பெற்ற ஆசிரியை- கனடா), யோகலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்- கனடா), கோகிலபூபதி (கனடா), துரைராஜசிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை- கனடா), ரேணுகா (கனடா) ஆகியோரின் அருமைத்தாயாரும், வசந்தகுமாரி (கொழும்பு), சந்திரகலா (யாழ்ப்பாணம்), சதாசிவம் (ஓய்வு பெற்ற அதிபர்- கனடா), செல்வமலர் (ஓய்வு பெற்ற ஆசிரியை-கனடா), அமிர்தலிங்கம் (லிகிதர், கமநல சேவை நிலையம், புங்குடுதீவு- கனடா), சாந்தகலா (கனடா), சுவேந்திரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், சுரேஸ்குமார் (பொறியியலாளர் , சிங்கப்பூர்) லஜனி (ஆசிரியை -அவிசாவளை), பிரதீபன் (பொறியியலாளர்- நியூசிலாந்து),கனடாவைச் சேர்ந்தவர்களான கிருஷிகா, சுபன், யசிகா, தாரணி, குகப்பிரியா (உதவிமுகாமையாளர், கார்கில்ஸ் நிறுவனம், தலைமைச் செயலகம், கொழும்பு), கலாநிதி சுந்தரவதனன் (பொறியியலாளர் -லண்டன்), ரஜிதா (ஆசிரியை, கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம், குருபரன் (A/L கணிதப் பிரிவு, 2013 யாழ். இந்துக் கல்லூரி), கனடாவைச் சேர்ந்தவர் களான கோபிராஜ், கீர்த்திகா, விபிதா, விதிஷா, கிஷான், சகிலா ஆகியோரின் பேத்தியும், உமையாளன் (கனடா) பூட்டியுமாவார்.

காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (லண்டன்), பாக்கியம், கந்தையா, நாகம்மா மற்றும் வள்ளியம்மை (யாழ்ப்பாணம்), ஆறுமுகம் (கனடா), தெய்வானைப்பிள்ளை (கனடா) ஆகியோரின் சகோதரியும், மகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், புவனேஸ்வரி மற்றும் தர்மலிங்கம் (பிரான்ஸ்), குமாரசாமி (வர்த்தகர்- மன்னார்), இராசலக்சுமி (கனடா) காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன், கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி, விசாலாட்சி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.11.2012 புதன்கிழமை கனடாவிலுள்ள றொறன்டோவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/1485)

தகவல்
எஸ்.கே. சண்முகலிங்கம் (மகன்)
(அதிபர்,
யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வி.)

இல. 124, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P.0212228722,
0772968429




2011 ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி ஆவணப்படுத்திய சிறந்த நூலகங்களுக்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்துக்கான விருதை அனலைதீவு பொது நூலகர் சந்திரசேகரம் தர்மிளா, ஊர் காவற்றுறை பிரதேச சபை செயலாளர் சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் ஆகியோர் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

## 13 ஆவது திருத்தத்தை நீக்க ஒருபோதும் இடமளியோம்

### அமைச்சர் ராஜித பாய்ச்சல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வர வேண்டும். அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை உறுதி செய்ய வேண்டுமென அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. பதின்மூன்றாவது திருத்தம் 1987 இல் அவசரமாக கொண்டு வரப்பட்டது. எனவே, மாற்றங்கள் தேவை. ஆனால், 13 ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்கு இடமளிக்கமாட்டோம்.

மாகாணசபை முறைமையால் இலங்கைக்கு மேலதிகமான வருமானம் கிடைக்கின்றது. அவ்வாறனதோர் நிலையில் எதற்காக ஜனாதிபதி மாகாண சபை முறைமையை இரத்துச் செய்யப் போகின்றார்.

அன்று பதின்மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்டு மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது அர்ப்பணிப்புடன் இதற்காக போராடினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வர வேண்டும். ஜனாதிபதியை பலப்படுத்த வேண்டும். அதிகாரப் பரவலாக்கலை நாங்கள் ஆதரிக்கின்றோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்கி அரசாங்கத்திற்குள் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார திஸ்ஸ விதாரண போன்ற பலர் உள்ளனர்.இதேபோன்று அதிகார பரவலாக்கலை ஆதரிக்கும் தமிழ் .முஸ்லிம் எம்.பிக்கள் அமைச்சர்கள் பலர் அரசாங்கத்திற்குள் இருக்கின்றனர்.

எனவே கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு வர வேண்டும். நாங்கள் அனைவரும் கலந்து பேசி தீர்வுகளை காண்போம். அதிகாரப் பரவலாக்கலை அர்த்தமுள்ளதாக்குவோம் என்றார். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13இற்கு பதிலாக 19 ஆவது அரசியல் அமைப்பை கையிலெடுக்கிறார் பஷில்

## இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்காக கொண்டு வரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை இரத்து செய்து அதற்காக அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை கொண்டு வரும் வகையில் 19ஆவது அரசியலமைப்பை சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.



இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் இதற்கான யோசனை முன்வைக்கப்படும்.

இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படும். அவர்களுக்கு கால அவகாசமும் வழங்கப்படும். அவர்கள் பதில் வழங்காதபோது தமிழர் பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகள் 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் என்றும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் 13ஆவது அரசியலமைப்புக்கு பதிலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு திட்டம் அவசியம் என்று தெரிவித்திருந்த நிலையிலேயே பசிலின் கருத்து வெளியாகியுள்ளது.

இது ஏற்கனவே வடக்கு - கிழக்கு இணைப்பை இரத்து செய்யுமாறு ஜே.வி.பியினால் தாக்கல் செய்யப்படும் மனுவுக்கு ஒத்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டுமென ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

இன்று உயர்நீதிமன்றில் விமல் வீரவன்ச மனு ஒன்றை தாக்கல் செய்ய உள்ளார்.


மேலும் மாகாண சபைகளை இரத்து செய்ய வேண்டும் எனவும் இது அபிவிருத்திக்கு தடை எனவும் ஊடகவியலாளர் மத்தியில் தெரிவித்திருந்தனர்.

மேலும் வடமாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அது அரசாங்கம் கொண்டு வரும் கூட்டங்களுக்கு தடையாக அமையும் என்றும் கூறியிருந்தனர்.

இந்நிலையில் வரவு - செலவுத் திட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, வடக்கு மாகாண தேர்தல் 2013 இல் இடம்பெறும் எனக் குறிப்பிட்டதோடு 13ஆவது அரசியலமைப்புக்கு பதிலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு குறித்தும் கருத்து வெளியிட்டிருந்தார்.

அக்கருத்தினை அடுத்தே 19 ஆவது அரசியல் அமைப்பு திட்டம் குறித்து சிந்திக்க தொடங்கியுள்ளார் பஷில் ராஜபக்ஷ. இத்திட்டத்தில் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு வருமென்றும் தெரிவுக்குழுவில் விவாதிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

19 ஆவது அரசியல் தீர்வுத் திருத்தச் சட்டம் ஒன்று உருவாக்கப்படின் அதில் உள்ள அரசியல் தீர்வு குறித்தும் அதன் உள்ளடக்கம் குறித்தும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். (அ -2)



யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு அண்மையில் நிழற்பிரதி இயந்திரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இதனை மார்க்கண்டுவும், ஆசிரியை செல்வி அன்பு சிபோஜினியும் வழங்குவதையும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதியின் அழைப்பை இரு கட்சிகளும் நிராகரித்தன

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடுத்த பகிரங்க அழைப்பை ஜே.வி.பியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நிராகரித்துள்ளன.

தேசியு, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களில் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சிகளிடம் கோரியிருந்தார். எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என குறித்த இரண்டு கட்சிகளும் அறிவித்துள்ளன.

ஜனாதிபதியின் இந்த அழைப்பானது யதார்த்தமானதல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனியாக தீர்மானங்களை மேற்கொண்டு சகல விடயங்களை மேற்கொண்டு வருகின்றார். ஏதேனும் தவறுகள் நெருக்கடி நிலைமைகளில் மட்டும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை நாடுவது பொருத்தமற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, எமது கட்சியை இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி கோரவில்லை என ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட உரையின் போது ஜனாதிபதி தேசிய விடுதலை முன்னணி என்ற கட்சிக்கே அழைப்பு விடுத்திருந்தார். அவ்வாறான ஓர் கட்சி இலங்கையில் கிடையாது. எமது கட்சியின் பெயர் மக்கள் விடுதலை முன்னணியாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, ஜனாதிபதி எமது கட்சிக்கு அழைப்பு விடுக்கவில்லை என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (அ - 2)

# டெங்கை கட்டுப்படுத்த பொலிஸாரும் இணைந்தனர்

மன்னாரில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் முகமாக விசேட சுகாதார நடவடிக்கைகளில் மன்னார் பொலிஸார் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வீடுகளாகச் செல்லும் பொலிஸார், வீடுகளிலுள்ள கழிவுகளை வெளியேற்றுமாறு வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துகின்ற அதேவேளை, வீடுகளில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களையும் கழிவு அகற்றும் வண்டிகளில் ஏற்றிச் செல்கின்றனர்.

அத்துடன், வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான இடங்கள் காணப்படுகின்றதா என்பதையும் இவர்கள் அவதானித்து வருகின்றனர்.

இதேவேளை, மன்னார் நகரசபை டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தும் முகமாக கழிவுநீர் வாய்க்கால்களை துப்புரவு செய்யும் நடவடிக்கையையும் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையும் துரிதப்படுத்தியுள்ளது. (அ-9)

# அத்துமீறி நுழைந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(கொழும்பு)

நாகை மீனவர்களை நடுக்கடலில் வழி மறித்து தாக்கி, பொருட்களை பறித்துக் கொண்டு, வலைகளை கடலில் வெட்டி விட்ட, இலங்கை கடற்படையினரின் செயல் மீனவர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்ட "நீலம்" புயல் காரணமாக, வீடுகளில் முடங்கிக் கிடந்த நாகை மீனவர்கள் புயலுக்கு பின் கடந்த 2ஆம் திகதி நூற்றுக்கணக்கான விசைப் படகுகளில் மீன் பிடிக்க சென்றனர்.

ஆழ்கடல் பகுதிக்கு சென்று மீன் பிடித்த மீனவர்கள் கரைக்கு திரும்பி வரும்போது நாகையில் இருந்து 50 மைல் தொலைவில் சிறிய கப்பலில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்கள் படகுகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கப்பலில் இருந்து மீனவர்களின் படகுகளில் இறங்கிய இலங்கை கடற்படையினர் ஆழ்கடல் பகுதிக்கு ஏன் வந்தீர்கள் என்று கேட்டு ரப்பர் தடி மற்றும் இரும்பு கம்பிகளால் தாக்கியுள்ளனர்.

இதில் மீனவர்களுக்கு இரத்தக் காயம் ஏற்படாவிட்டாலும் கடுமையான அடி விழுந்துள்ளது.

மேலும், படகுகளில் இருந்து ஜி.பி.எஸ், எக்கோ, வயர்லெஸ் கருவிகள், மொபைல் போன்களை பறித்துக் கொண்டு, டீசல், ஐஸ்கட்டிகள், உணவுப் பொருட்கள், மீன்களை கடலில் தூக்கி வீசியவர்கள் வலைகளை வெட்டி கடலில் விட்டு விரட்டியுள்ளனர்.

பலத்த பொருட்சேதமும் மன வேதனையும் அடைந்த மீனவர்கள் வெறுங் கையுடன் கரைக்குத் திரும்பினர்.

இது குறித்து மீன்வளத் துறையினரிடம் மீனவர்கள் புகார் தெரிவிக்கவில்லை. (அ-2)

# கால்நடைகளால் பயிர்கள் நாசம்

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை நடைபெற்று வரும் இவ்வேளையில் கால்நடைகளால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பிரதேசத்தில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கை நடைபெற்று வரும் நிலையில் வேறு இடத்தில் இருந்து மாடுகள் இங்கு கொண்டுவரப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்காக எந்தவொரு பொது அமைப்புக்களும் முன்வரவில்லை.

எனவே உரிய தரப்பினர் இந்நிலையைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். (அ-3 - 264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய மனம் ஏழைகளுக்காக இரக்கம் கொள்கின்றதோ, அவனையே மகாத்மா என்பேன். ~ சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# விபத்தின் இழப்புகளுக்கு உதவுவார் யாரும் உளரோ!

எங்கள் மண்ணில் நடந்தேறும் விபத்து மரணங்களை நினைத்தாலே இதயம் வெடித்து விடும். அந்தளவிற்கு விபத்தின் கொடூரம் எங்கள் மனங்களை கசக்கிப் பிழிகின்றன.

நேற்றுமுன்தினம் காலை, மூன்று பெண் பிள்ளைகளின் தாயொருவர் ஏ–9 வீதியில் நடந்த விபத்தில் பரிதாபகரமாகப் பலியாகிப்போனார்.

பளையில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்கின்ற பிரஸ்தாப குடும்பப் பெண், கண்ணுக்கு முன்பாக பஸ் மோதி பலியாகிய சம்பவம் சாதாரணமானதல்ல.

தன்குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வெய்யிலில் காய்ந்து கடினமாக உழைத்த ஒரு தாய் காலை வேளையில் கடமைக்குச் சென்ற போது– ஒரு கணப்பொழுதில் மரணித்துப் போவதென்பதை எவரும் சாதாரண சம்பவமாகக் கருதிவிடக் கூடாது.

மூன்று பெண் பிள்ளைகள். அதில் மூத்த மகள் ருதுவாகி மூன்று நாட்கள். அந்த மூன்று நாட்களும் கடமைக்கு லீவு கொடுத்துவிட்டு தன் பிள்ளையை கவனித்த தாய் நான்காவது நாள், மூன்று நாள் லீவு என்ற கடமை உணர்வுமிக்க பயத்தோடு வீதியைக் கடக்கின்றார். என்னோ! கொடுமை.

வேகமாக வந்த பஸ் அந்தத்தாயை அடித்து விழுத்துகிறது.

தாங்க முடியாத துன்பம். வேலைக்குச் சென்ற அம்மா மாலைவேளை வேலை முடித்து வருவார் என்றிருந்த பிள்ளைகள் தாயின் உயிரற்ற உடலைக் காண்பதாக இருந்தால் நிலைமை எப்படியிருக்கும்.

ஓ! இறைவா! இப்படியான விபத்துக்கள் எங்கள் மண்ணில் ஒன்றா! இரண்டா! ஏன்தான் இப்படி.

சாரதியென்ற ஆசனத்தில் ஏறி அமர்ந்துவிட்டால், மனித உயிர்களின் பாதுகாப்பிற்கு நான் பொறுப்பானவன் என்று எண்ண வேண்டாமோ! சாரதி ஆசனத்திலிருந்து கொண்டு எதுவும் கதைக்கலாம், சிரிக்கலாம், தன் சாரத்திய வித்துவத்தைக் காட்டலாம் என்று நினைத்தால் – கையடக்கத் தொலைபேசிகளை காதில் வைத்துக் கொண்டு சிந்தனையை வேறு திசைநோக்கி திருப்பினால் எத்துணை ஆபத்து என்பதை புரிந்து கொள்ள வேண்டாமோ!

அன்புக்குரியவர்களே! ஒரு பெண்ணின் உழைப்பில் சீவியம் நடக்கக் கூடிய குடும்பத்தில் ஏற்பட்ட இத்தகைய இழப்புகளுக்கு உதவுவது மனிதப் பண்பு. அந்த உதவியைச் செய்ய பரோபகார உள்ளம் படைத்தவர்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கையோடு,

விபத்து மரணங்களைத் தடுக்க–தவிர்க்க பொது மக்களிடையேயான விழிப்பும், நிதானமான சாரத்தியமும் எங்கள் மண்ணில் நிலைபேறடைய உரியவர்கள் உதவட்டும்.

இது இழப்புகளின் வேதனையிலிருந்து எழும் உருக்கமான கோரிக்கை. உதாசீனம் செய்து விடாதீர்கள்.

# தமிழர்களை இராணுவத்தில் இணைக்க அமெரிக்க பாதுகாப்புத் துறை திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தில் தமிழர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்மொழியாற்றலுடைய உத்தியோகத்தர்களை அமெரிக்க இராணுவத்தில் உள்ளீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்புத் துறை தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

சிறப்பு மொழித் தேர்ச்சி அடிப்படையில் அமெரிக்காவில் தற்காலிகமாக வசித்துவரும் 550 பேரை முதற்கட்டமாக அமெரிக்க இராணுவம் சேர்த்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது.

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை பேசக் கூடியவர்கள் இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தமிழ், இந்தி, அரபி, சீன, இக்போ, குர்திஸ், நேபாளி, பாஸ்ரோ, ருஸ்ய மொழிகள் உள்ளிட்ட 35 மொழிகளைப் பேசுவோர் அமெரிக்க இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ளனர்.

இவர்கள் பத்துவார கால அடிப்படைப் பயிற்சிக்குப்பின்னர், பணிகளில் அமர்த்தப்படுவர்.

இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் தற்காலிகமாக குடியிருந்த தமிழர்கள் அமெரிக்க இராணுவத்தில்சேர முடியும்.

இவர்களுக்கு நிரந்தர அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும். இந்தத் திட்டம் வெற்றிபெற்றால் இராணுவத்தின் எல்லா பிரிவுகளுக்கும் இது விரிவுப்படுத்தப்படும் என்று பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க இராணுவத்தில் தற்போது 29 ஆயிரம் வெளிநாட்டவர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ–11)

# ஆளுநர்கள் ஒன்பது பேர் முல்லைத்தீவுக்குச் செல்வர்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களையும் சேர்ந்த ஆளுநர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் என வடக்குமாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளுநர்களின் 15ஆவது மாநாடு எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்குகொள்ளும் 9 மாகாணங்களைச் சேர்ந்த ஆளுநர்கள் மறுநாள் அதாவது எதிர்வரும் 16 ஆம் திகதி காலை நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்குச் சென்று விசேட வழிபாட்டில் ஈடுபடவுள்ளதோடு நயினாதீவுக்கும் நெடுந்தீவுக்கும் விஜயம் செய்யும் அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் செல்லவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ–6)

# சகல விடயங்களுக்கும் படையினரே பயன்படுத்தப்படுகின்றனர்– ஜே.வி.பி.

நாட்டின் சகல விடயங்களிலும் அரசாங்கம் இராணுவத்தை ஈடுபடுத்தி வருவதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

இராணுவத்தினர் அல்லது விசேட அதிரடிப்படையினரை சகல துறைகளிலும் ஈடுபடுத்தவேண்டும் என்ற மனோநிலை ஆளும் கட்சியின் சிலரிடம் காணப்படுகின்றது.

சிறைச்சாலை உள்ளகப் பாதுகாப்பிற்கு ஏற்கெனவே சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் வெலிக்கடைச்சிறையில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெலிக்கடை சிறைச்சாலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்படவேண்டும். சிறைச்சாலை மோதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 என ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. எனினும் உண்மையான எண்ணிக்கைகள் இதனைவிடவும் அதிகமாக இருக்கக்கூடும்.

சிறைச்சாலைக்குள் கைதிகள் போதைப்பொருள், கையடக்கத் தொலைபேசிகள் வைத்திருப்பதனை மறுப்பதற்கில்லை. சிறைச்சாலைக்குள் இவ்வாறான பொருட்கள் கிடைக்கப்பெறும் வழிகளை மறைப்பது சிறந்த தீர்மானமாக அமையும்.

ஏற்கெனவே இவ்வாறான ஓர் மோதல் சம்பவமொன்று வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ள நிலையில் அந்த அனுபவத்தை கவனத்திற் கொள்ளாது அதிகாரிகள் எடுத்த தீர்மானம் முட்டாள்தனமானது என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ–2)

# மக்கள் வங்கி திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

தீபாவளிக் கொடுக்கல் வாங்கல்களுக்காக நாளை செவ்வாய்க்கிழமை மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுன்னாகம், கன்னாதிட்டி, சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய கிளைகள் திறந்திருக்கும் என யாழ் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.(அ–9)

# த.பா.உ.கூ.ச.தலைவராக ஜெயக்குமார் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக செல்லத்துரை ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் ஆண்டுப்பொதுக்கூட்டமும் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முன்னாள் தலைவர் க.இலங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே புதிய தலைவராக ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டார். (அ–6)


# நிர்வாகிகள் தெரிவு

திருநெல்வேலி கலாமன்ற சன சமூக நிலையத்தின் 64ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் நிலைய மண்டபத்தில் தலைவர் அ.இ.சுரேஷ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக அ.இ.சுரேஷ், செயலாளராக த.சி. சிவநேசன், பொருளாளராக திருமதி இ.சிவசக்தி, உபதலைவர் பா.பாலகணேசன், உபசெயலாளராக இ.பாலராசா, சமயத்துறைத் தலைவர் க.பரமநாதன், சமயத்துறை செயலாளராக இ.பிரசாந்தி, விளையாட்டுக்கழக தலைவர் சு. துரைராசசிங்கம் ஆகியோர் தெரிவாகினர். (அ–2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உள்ளத்தின் சோதனை



மனதின் நிலையே வாழ்வின் வளம் ஆகும். நிலத்தில் ஊன்றும் வித்து எதுவென்றாலும் நீர் தெளித்து வந்தால் அது முளைத்துப் பயிராகி அதனதன் தன்மைக்கேற்ற பயன் தருகின்றது.


அதுபோன்ற உள்ளத்தில் ஊன்றும் எண்ணங்களும் நாளுக்குநாள் உறுதிபெற்று வாழ்வின் பயனாக விளைந்து விடும். ஆகவே நமது வாழ்வு நலமுற வேண்டுமெனில் எந்தவிதமான கெட்ட எண்ணத்தையும் நமது உள்ளத்தில் ஊன்றவோ வளரவிடவோ கூடாது.

கோபம், வஞ்சம், பொறாமை, வெறுப்புணர்ச்சி, பேராசை, ஒழுக்கம், மீறிய காம நோக்கம், தற்பெருமை, அவமதிப்பு, அவசியமற்ற பயம், அதிகாரப்போதை என்ற பத்து வகையும் நமது உள்ளத்தில் நிறைவுபெற வொட்டாமல் அவ்வப்போது ஆராய்ந்து, களைந்து கொண்டே இருக்கவேண்டும்.

இவை வளர்ந்தால் நல்லெண்ணம் வருவதற்கோ, நிலைப்பதற்கோஇடமில்லாத துன்பம் தரும் காடாக நமது உள்ளம் மாறிவிடும். உடல் காந்தசக்தியைப் பாழாக்கிக் கொண்டே இருக்கும் ஓட்டைகளாக, இக்கெட்ட குணங்கள் மாறிவிடும்.

காலையிலும் மாலையிலும் 10 நிமிட நேரம் அமைதியாக உட்கார்ந்து உள்ளத்தைச் சோதனையிடும் பணியைத் தொடங்குங்கள். 30 நாட்களில் கிடைக்கும் வெற்றியை அனுபவத்தில் கண்டு மகிழுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காற்பந்தாட்ட மைதானம் 19 ஆம் திகதி திறப்பு

ஜேர்மன் வெளிநாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் பீபா ஆகியவற்றின் நிதி யுதவியுடன் ஏ9 வீதி அரியாலைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் காற்பாந்தாட்ட மைதானம் எதிர்வரும் 19 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ்.காற்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

இந்நிகழ்வில்,சர்வதேச காற்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் யோசப் பிளட்பர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்த இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் மனிலா பெர்னான்டோவின் புதல்வர் உட்பட சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் குழு இந்த மைதானத்தின் கட்டுமானப்பணிகளை பார்வையிட்டதுடன் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து யாழ்.காற்பந்தாட்ட சம்மேளன அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக அவர்மேலும் தெரிவித்தார்.

# மாவட்ட ரீதியான காற்பந்து; யாழ் அணி வெற்றி





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் தேசிய ரீதியில் வீரர்களை தெரிவு செய்வதற்காக வடமாகாண மாவட்ட அணிகளுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

முதலாவது போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியினை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாண அணி மூன்று கோல்களை போட்டது. முல்லைத்தீவு அணி கோல் எதனையும் பெறவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும் 5 கோல்களை யாழ்ப்பாண மாவட்ட அணி பெற்றுக் கொண்டது.

இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 8:0 என்ற கோல் கணக்கில் வென்றது. யாழ்ப்பாண மாவட்ட அணி சார்பாக எம். நிதர்சன் 4 கோல்களையும் அ.யூட் 2 கோல்களையும் அ.டிலுசன், ரி.துஸ்யந்தன் ஆகியோர் தலா ஒரு கோல்களையும் போட்டனர்.

# சங்கானை கோட்ட வலைப்பந்தாட்டம்; அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் சம்பியன்







யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் சங்கானைக் கோட்டப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதி மற்றும் மூன்றாமிடங்களுக்கான போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் வலைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

இறுதியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.


இப்போட்டியில் அபாரமாக ஆடிய சரஸ்வதி மகா வித்தியாலயம் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தினை வட்டு. மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டது.

வெற்றிபெற்ற அணிகள், வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா ஆதிக்கம்


அவுஸ்ரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் மூன்றாம் நாள் முடிபில் தென்னாபிரிக்க



அணி தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 450 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றைய ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே ஹசிம் அம்லா ஆட்டமிழந்த போதிலும் ஜக்ஸ் கலிஸ் மிகச்சிறப்பாக ஆடி தனது 44வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.



துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் கலிஸ் 147 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 104 ஓட்டங்களையும் அல்விரோ பீற்றர்சன் 64 ஓட்டங்களையும் ஏ.பி.டி. வில்லியர்ஸ் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் அவுஸ்ரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பற்றின்சன் 3 விக்கெட்டுக்களையும் பென் ஹில்பன்ஹோஸ், பீற்றர் சிடில், நேதன் லையன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி நேற்றைய நாள் முடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றியிருந்தது. முதலாவது விக்கெட்டை 13 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி அதன் பின்னர் 3 விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.


அதன் பின் எட் கொவான் மற்றும் மைக்கல் கிளார்க் இருவரும் பிரிக்கப்படாத 61 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்ரேலிய அணியைச் சற்று ஸ்திரப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக எட் கொவான் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்றாக இடம்பெறவில்லை என்பதோடு தென்னாபிரிக்க அணியின் ஜே.பி.டுமினி காயமடைந்துள்ளாதால் தென்னாபிரிக்க அணி சார்பாக 10 வீரர்கள் மாத்திரமே துடுப்பெடுத்தாடியமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்.இந்து வீரன் அவுஸ்திரேலியாவில் சாதனை




அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகர் அல்பேர்ட் பார்க்கில் நடைபெறும் விக்டோரியா விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லுரி வீரன் இரத்தினசிங்கம் செந்தூரன் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

இந்த போட்டி அவுஸ்திரேலிய நேரப்படி நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. இப்போட்டியில் 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து செந்தூரன் இரண்டாமிடத்தை பெற்றார்.

இவர் தேசிய கனிஷ்ட பிரிவில் உயரம்



பாய்தலில் 1.92 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை நிகழ்த்தியிருந்தார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் விக்டோரியா மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினைப்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்.-நியூசிலாந்து ஒருநாள் போட்டி இன்று

இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான ஐந்தாவதும் கடைசியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று பகல் இரவு ஆட்டமாக 2.30 மணிக்கு அம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளது.

ஏற்கெனவே நடைபெற்ற போட்டியில் இலங்கை 3:0 என்ற ரீதியில் தொடரை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முதலாவது போட்டி மழையினால் கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரேசில் அழகியை காதலிக்கிறார் கோஹ்லி?

சிங்கப்பூரில் பிரேசில் மொடல் அழகியுடன் இந்திய கிரிக்கெட் வீரர் கோஹ்லி ஊர் சுற்றியதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த மாதங்களுக்கு முன்பு சிங்கப்பூரில் ஒரு பெண்ணுடன் ஊர் சுற்றி வந்தார் கோஹ்லி.



இது குறித்து ஊடகங்கள் கேட்ட கேள்விக்கு சொந்த விடயங்கள் குறித்து பதிலளிக்க முடியாது என தெரிவித்தார்.

இந்நிலையிலேயே அந்த அழகி பெயர் இசபெல்லி லெயிட் என்பதும் இருவரும் காதலிக்கிறார்கள் என்று கூட தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த யூன் மாதம் இவர்கள் அறிமுகமாகிக் கொண்டார்கள். பின்னர் நட்புடன் பழகிய இருவரும் காதலிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

கோஹ்லியுடன் ஏற்பட்ட காதலுக்கு பின்னரே இசபெல்லி மும்பையில் குடியேறினார். பின்னர் கோஹ்லியை சந்திக்கும் பொருட்டு அடிக்கடி டெல்லி சென்று வந்துள்ளார்.

மேலும் நண்பர்களிடம் இசபெல்லியைதன் தோழி என்றே கோஹலி அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பட்மிண்டன் தரவரிசையில் முதலிடம் பிடிப்பேன்

பட்மிண்டன் தரவரிசையில் முதலிடத்தை பிடிப்பேன் என சாய்னா நேவல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த நிகழ்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய சாய்னா, முதல் முதலாக தானே நகரில் 8 முதல் 10 வயதுக்கு உட்பட்டோருக்கான பட்மிண்டன் தொடரில் என்னை விட வயது அதிகமான நபர்களுடன் பங்கேற்று விளையாடினேன். ஆனால் அந்த போட்டியில் தோல்வியடைந்து விட்டேன்.

சாய்னா நேவல்



நான் முதலிடம் பிடிக்க வேண்டும் என்பதற்காக என்னை எனது தாயார் அந்த இடத்திலேயே கண்டித்தார். அதைப் பார்த்த நபர்கள் சிரித்தனர்.

அன்று நான் யார் என்பதை இவர்களுக்கு காட்ட வேண்டும் என உறுதி எடுத்தேன். விரைவில் பட்மிண்டன் தரவரிசையில் முதலிடம் பிடிப்பேன் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய நாடுகளுக்கு வருகிறார் ஒபாமா

ஆசிய நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் விரைவில் அமெரிக்க அதிபர் ஒபாமா சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கார்னே தெரிவித்தார்.

இது தொடர்பாக அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கார்னே கூறுகையில்,

ஆசிய நாடுகளில் விரைவான வளர்ச்சி காணப்படுகிறது. இதனைத் தொடர்ந்து ஆசிய பசிபிக் பிராந்தியங்களில் உள்ள நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்த விரும்புகிறோம். அதன் ஒரு பகுதியாக இம்மாத இறுதியில் தாய்லாந்து, கம்போடியா, மியன்மார் ஆகிய நாடுகளுக்கு ஒபாமா பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அதேபோன்று இந்த பிராந்தியத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பனேட்டா, வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஆகியோரும் பயணம் மேற்கொள்வார்கள். கடந்த காலங்களில் செயல்பட்டது போல ஆசிய நாடுகளுடன் வர்த்தக, பொருளாதார உறவுகளை மேம்படுத்த ஒபாமா நடவடிக்கை எடுக்கவுள்ளார். அந்நாடுகளில் ஜனநாயகம், மனித உரிமைகள் உள்ளிட்டவற்றை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு போர்களை அமெரிக்கா சந்தித்துள்ளது. இந்நிலையில் ஆசிய நாடுகள் தொடர்பான அமெரிக்காவின் கண்ணோட்டத்தில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றார் ஜே கார்னே. (எ-11)

## ஐ.நாவுக்கு...

தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகளுடன் இந்தியப் பிரதிநிதி ஆலோசனைகளை நடத்தினார். மீளாய்வுக் கூட்டத்தின் போது விவாதங்களுக்குரிய நேரத்தைத் தவிர்க்கும் பொருட்டு நடுநிலையாளர் என்ற நிலையில் இந்தியப் பிரதிநிதி இதனை மேற்கொண்டார்.

இலங்கைப் பிரதிநிதி நிராகரிக்கும் பரிந்துரைகளையும் ஏற்றுக்கொள்ளும் பரிந்துரைகளையும் வரிசைப்படுத்தி மீளாய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க இந்தியப் பிரதிநிதி உதவினார். இது அங்கு அவரது கடமையாக இருந்தது.

இதனைத்தான் அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்தியா தமக்கு உதவி புரிந்ததாகக் குறிப்பிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த மீளாய்வுக் கூட்டத் தொடரில் தீர்மானங்களை எடுக்கும் எவ்வித நிகழ்ச்சி நிரலும் இல்லை. ஆனால் சகல விடயங்களையும் ஆவணப்படுத்தி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் சமர்ப்பிக்க வேண்டும். அதற்காகவே இந்த மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் இலங்கைக்கு பெரும் நெருக்குவாரத்தை ஏற்படுத்தும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ- 11)

# 19-வது திருத்தமாக மாறும் 13...

இது குறித்து மனோ கணேசன் கூறியதாவது, வரவு செலவு திட்டம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை ஆகிய பரபரப்பான நிகழ்வுகளுக்கு மத்தியில் 19-ம் திருத்தம் என்ற ஒரு முயற்சி சத்தமில்லாமல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஏனைய விடயங்களை விட இன்றைய தினத்தில் தமிழ் மக்களுக்கு இதுவே மிகவும் முக்கியமான விவகாரமாகும். இன்றைய(நேற்று) கூட்டத்தில் இது சம்மந்தமாக ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பினேன்.

இதற்கு விமல் வீரவன்சவுடனான கலந்துரையாடலின் போது அவர் பதின்மூன்றாம் திருத்தத்தை அகற்ற வேண்டும் என்ற கருத்தையும் அது எமது நாட்டின் மீது திணிக்கப்பட்ட சட்டம் என்றும் வலியுறுத்தினார்.

ஐ.தே. க. 13 ஐ முழுமையாக அகற்ற உடன்படாது என்றும் ஆனால் அது திருத்தப்படும் அவசியத்தை ஐ.தே.க. ஏற்றுக்கொள்கிறது என்றும் அத்தகைய திருத்தங்கள் சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகளை ஈடுசெய்ய வேண்டும் என்று நாம் அவருக்கு தெரிவித்ததாக ரணில் எம்மிடம் கூறினார்.

அத்துடன் எதிர்வரும் ஐ.தே.கவின் மாநாட்டில் தமது கட்சியின் கொள்கை பிரகடனம் வெளியிடப்படும் எனவும் அதில் 13ஆவது திருத்தம், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சுகள் மற்றும் சமூக ஜனநாயக பொருளாதார அமைவு முறை ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மேலும் புதிய ஒரு அரசியலமைப்பு பற்றியும் தாம் கலந்தாலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். பதின்மூன்று என்பது ஒரு ஆரம்பம். அதிலிருந்து முன்னோக்கி செல்லும்படிதான் கற்றுக்கொண்ட ஆணைக்குழு சிபாரிசும் கூறுகிறது. பதின்மூன்று திருத்தப்படும் போது அல்லது ரணிலின் உத்தேச புது அரசியலமைப்பு யோசனைகளின் போது பதின்மூன்றிலிருந்து முன்னோக்கி போக வேண்டுமே தவிர இருப்பதையும் வெட்டி குறைக்கக் கூடாது அவ்வாறான திட்டங்களுக்கு ஐ.தே.க. உடன்படக்கூடாது என நான் தெரிவித்தேன்.

முழு நாட்டையும் இனவாத அடிப்படையில் வழி நடத்தி செல்ல எத்தணிக்கும் விமல் வீரவன்சவின் முயற்சிகளை ஜனநாயக மக்கள் முன்னணி கடுமையாக எதிர்க்கும். நமது முயற்சிகளுக்கு நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாம் எமது ஏனைய கூட்டணி கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து இனவாதிகளுக்கு எதிராக நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம் என்றார். (எ-11)

## உதுல் பிரேம...

சம்பவத்தை அடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். (எ- 11)

## ஐ.தே.க-...

மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து செயற்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

தேவையேற்படும்போது மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து எதிர்க்கட்சியின் எதிர்ப்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் செயற்படும் என அவர் தெரிவித்தார்.

எதிர்க் கட்சியின் எதிர்பின் மக்கள் மேடை எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (எ-11)

## வெலிக்கடை...

கலவரத்தில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுவதாகவும் அவர் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் இல்லை என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ-11)

## அரச ஊழிய...

அதிகரிக்கப்பட்டது.

பாண் இறாத்தல் 2 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது. இவை அனைத்தையும் கடந்த பின்னர் அரச சேவையாளரின் ஒரு நாள் வேதனம் 25 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது.

எனவே நாங்கள் வேதன அதிகரிப்பை மேலும் கோருகின்றோம்.

இதன் காரணமாக உரிமைகளை பெறவும் நிவாரணங்களைப் பெறவும் மக்களை ஒன்றிணைத்து வீதியில் இறங்கிப் போராட தீர்மானித்துள்ளோம் என்றார். (எ- 11)

## பிரான்ஸிலுள்ள...

சேர்ந்த மூவர் தமக்கு உயிராபத்து உள்ளதால் பொலிஸ் பாதுகாப்பு கேட்டிருப்பதாகவும் அந்த கோரிக்கையை தமது பிரிவு கவனிப்பதில்லை எனவும் கோரிக்கையை தாம் தேசிய பொலிஸாருக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் புலனாய்வுப் பொலிஸார் கூறினர்.

விடுதலைப் புலிகள் நெடியவன் அணியின் பிரான்ஸ் தலைவர் பரிதி கொல்லப்பட்டுள்ளதால் அடுத்த நிலைத் தலைவர்கள் அதே அச்சுறுத்தல் தமக்கு உள்ள காரண த்தால் பொலிஸ் பாதுகாப்பைக் கோரியுள்ளார்கள் என்று தெரிகிறது.

விடுதலைப்புலிகள் நெடியவன் அணி வட்டாரங்களில் தமது 2-ம் மட்ட தளபதிகள் தாக்கப்படும் அபாயம் உள்ளதால் பொலிஸ் பாதுகாப்பு கோரப்பட்டது உண்மைதான் எனத் தெரிவித்தார்கள்.

பாதுகாப்புக் கொடுக்கப்படுமா என்பது இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை. (எ-11)

## ஈழத் தமிழர்...

பின்னர் லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழர்கள் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இலங்கைத் தமிழர்களின் நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறினோம்.

இந்த பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய எங்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்த தி.மு.க. தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் கழக அமைப்பு நிர்வாகிகள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார் ஸ்ராலின். (எ - 11)

## ஒன்பது நாடுகள்...

போர்க் குற்றவாளியாக அறிவிக்கும் நோக்கில் இந்த நாடுகள் செயற்பட்டுள்ளன. இந்த ஒன்பது நாடுகளும் அமெரிக்காவிற்கு சார்பான நாடுகள் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இலங்கை ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடவில்லை எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ - 11)


L.L. NO. 2490
DOHA QATAR நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

உங்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுமுகமாக இலங்கை அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினால் இம்மாதம் 17ஆம் திகதி Green Grass Hotel யாழ்ப்பாணத்திலும், 18 ஆம் திகதி Star Rest கிளிநொச்சி பரந்தனிலும் காலை 09.00 மணியிலிருந்து 05.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் தகுதியுடையவர்கள் உடன் நேரில் வரவும். (C1478)

குறிப்பு: டிக்கட், பியீரோ உட்பட விஸா கிடைத்தவுடன் மொத்தக் கட்டணமாக ரூபா 60 ஆயிரம் மட்டுமே அறவிடப்படும். House Maid (வீட்டுப் பணிப்பெண்களுக்கு 06 மாத சம்பளம் முற்பணமாகவும் மற்றும் அனைத்து செலவுகளும் முற்றிலும் இலவசமாக செய்து அனுப்பிவைக்கப்படும்.

| JOB | QTY | SALARY (Q.R) |
|---|---|---|
| மேஷன் (Mason) | 75 | 1,200-1,500 |
| இலக்ரிஷியன் (Electrician) | 20 | 1,200-2,000 |
| கார்பென்டர் (Carpenter) | 28 | 1,200-1,500 |
| பெயின்டர் (Painter) | 18 | 1,000-1,200 |
| கம்பிக் கூடு கட்டுபவர்கள் (Steel Fixer) | 32 | 900-1,000 |
| உதவியாளர்கள் (Helpers) | 112 | 900-1,000 |
| சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) | 96 | 800-900 |
| சமையல்செய்பவர்கள் (Cook) | 05 | 1,000-1,200 |
| கணக்காளர் (Accountant) | 08 | 1,200-2,000 |
| சாரதிமார்கள் (Drivers) | 55 | 1,200-1,600 |
| A/C Technician | 16 | 1,200-2,000 |
| Welders | 12 | 1,200-2,000 |
| Marketing | 12 | 1,200-,4,000 |

1 QR = Rs. 36.75

சலுகைகளும் விதிமுறைகளும்
இலவசம்
தங்குமிடம் போக்குவரத்து மருத்துவ வசதி
மேலதிக நேரம் உண்டு. நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலங்கள்

17ம் திகதி Green Grass Hotel #33, Aasirwatham Lane, Hospital Road, Jaffna.
18ம் திகதி Star Rest Kandy Road, (Paranthan) Kilinochchi.

பதிவுகளுக்கு விரையுங்கள்
AIR TRUST
OVERSEAS MAN POWER CONSULTANT
#985, 1ST FLOOR MARADANA RD, BORELLA, COLOMBO-08
011 - 2676777, 075 0650084



UK-USA-Australia-New Zealand-Malaysia-Etc...

வெளிநாட்டு உயர்கல்வி

விரும்பிய நாட்டில் விரும்பியதுறையில், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி தொடர வேண்டுமா?

Admission முதல் VISA பெற்றுக்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கின்றது 13 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த PAC ASIA மற்றும் BCAS CAMPUS.

எதிர்வரும் 16ம்17ம் திகதிகளில் இந்நிறுவனங்களின் சிரேஷ்ட மாணவ ஆலோசகர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து புதிய VISA நடைமுறைகள் மற்றும் தொழில் கல்வி வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளுங்கள். இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.



எமது சேவை முற்றிலும் இலவசம்
முதல் 20 பேருக்கு விமானச் சீட்டு இலவசம்
இடம் :
IISEEES NALLUR CAMPUS
762, Point Pedro Road, Nallur.
MIGRATION, VISIT னை பெற்றுக்கொள்வதற்கான விசேட ஏற்பாடுகளும் உண்டு.
PAC ASIA STUDY ABROAD
BCAS STUDY ABROAD
(C1482)
தகவல்களுக்கு : 0777444225, 0774446626, 021 222 4728



இம்மானுவேல்
தெய்வீக சுகமளிக்கும்
ஜெப ஆலயம்



லண்டன் தேசத்தில் அமைந்துள்ள இம்மானுவேல் ஜெப ஆலயத்திலிருந்து வல்லமையான பாஸ்டர் டேவிற் அவர்கள் இலங்கை தேசத்திற்கு வருகை தந்துள்ளார். ஆண்டவர் யேசுவின் வல்லமையினால் உங்கள் துன்பங்கள், கஷ்டங்கள், கவலைகள் அனைத்தையும் நீக்கி ஆசீர்வதித்து விடுதலை தரவுள்ளார்.

(C -1487)

நீங்கள் தொடர்பு கொள்ள : 0044 208 984 1029 (லண்டன்) 077 608 2320 (உள்நாடு)



தேவை
ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்...
☀ விற்பனையாளர்கள்
☀ சிட்டை எழுதுனர்கள்
(இரும்புக்கடை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது) பகல் உணவுடன் கணிசமான ஊதியம் வழங்கப்படும்.
ஆல்சிலோன் டிஸ்டிபியூட்டர்ஸ்
212, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (C1478)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org